# இன்பவானில்

ச.வே.பஞ்சாட்சரம்




JPL
C7007

L
ல
பஞ்சா
7,உ

7007CC

85/50
PUBLIC LIBRARY
JAFFNA

# இன்ப வானில்

அகத்துறைக் கவிதைகள்.

155720

ச. வே. பஞ்சாட்சரம்

7007 CC
KOHA JPL
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.

அன்பு வெளியீடு
550/7 கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

155720 CC.

# INBA VANIL

A COLLECTION OF POEMS.

**Author: S. V. Panchadcharam.**

811

உரிமை
ஆசிரியருக்கே.

அட்டை ஓவியம்: திரு. R. ஸ்டீபன்ஸ்,
ஹில்ஹூட் வர்த்தகக் கல்லூரி,
புசல்லாவை.

அச்சுப்பதிவு:
நாதன் அச்சகம்,
புசல்லாவை.

KOHA JPL

## அன்பு வெளியீட்டின் உரை

கவிஞர் தில்லைச் சிவனின் 'தாய்' என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு விற்பனையில் நல்ல தொரு இடத்தைப் பிடித்த நாம், கவிஞர் பஞ்சாட்சரத்தின் 'இன்ப வானில்' என்ற கவிதைத் தொகுப்பினை வெளியிடு வதில் பெருமிதம் அடைகின்றோம். சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்ற கவிஞரின் கவிதைகளைப் பற்றி நாம் கூற வேண்டியதில்லை! சர்க்கரை இனிக்கும் என்று சொல்லியா தெரிய வேண்டும்? 'இன்பவானில்' கவிதைகள், இன்ப வான் வரை அழைத்துச் செல்லும்; உணர்ச்சி ஊட்டும்; அறிவில் திகழ வைக்கும்.

இந் நூலை யாத்த கவிஞர் அமைதியானவர்; பண்புடையாளர்; ஒருவரை ஒருவர் 'சொறியத்' தெரியாதவர்! அறிவில் பழுத்த தன்மை எப்படியிருக்க வைக்குமோ, அப்படி யாகி விட்டவர். அந்த உயர்தன்மை மிளிரும் கவிஞரின் "இன்ப வானிலை" வெளியிடுவதால் நாம் மட்டுமா, தமிழ் கூறும் நல்லுலகமே பெருமையடையும்!

கவிதைகளைப் பாடுங்கள்! பின்பு கூறுங்கள்!

"அன்பு வெளியீடு"

550/7, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
25-8-71

# முருகு வணக்கம்

வெட்டை வெளிச் செம்மலைகள்!
வீண்கற் கருமலைகள்! — அப்பாலோ
பட்டுச் செழுஞ்சாரற்
பாங்கார் பசும் மலைகள்! — ஒப்பாக
கொட்டும் பனிக்குள்
கொலுவிருக்கும் நீலமலை! — மப்பாக்கும்
பட்டி முகில்கள்
படிந்துறங்கும் வெண்மலைகள்! — அப்பப்பா!
எட்டுக் குடியான் எழில்!

வெள்ளருவிச் சந்தவொலி!
வீடுகளின் செங்கூரை! — வீதிகளில்
முள்ளின் மரம் பெய்
முருக்கம் பூச் செவ்விதழ்கள்! — ஊதியுளங்
கிள்ளும் வளியின்
கிளுகிளுப்பு! பாறைகளில் — மோதிவிழும்
கொள்ளைச் சிவப்புக்
குலவும் பழப்பாக்கு! — சாதியிலான்
வள்ளியவன் வாழும் மலை!

விளையாடி ஓடிவந்து
வீழருவி நீருள் — குலாவி
இளையார் குளிர் வெல்லும்
இன்பவெறிக் கூத்து! — பலாவின்
சுளையாலே சொல்லுதிர்த்துச்
சுற்றும் இணைகள்! — துலாபோல்
களையாடும் காற்றில்
கல கலக்கும் பள்ளம்! — கலாபம்
அளைவான் அடுக்கம் ஆ கா!

—ச. வே. பஞ்சாட்சரம்

PUBLIC LIBRARY
JAFFNA

கலைச்செல்வி

ஆசிரியர்

# முன்னுரை

நாட்டு விடுதலைக்காகப் பாட்டுப் பாடிய பாரதி, பாட்டு விடுதலையையும் நிலை நாட்டியே சென்ருன். பண்டிதர்களின் இலக்கண வலைக்குட் சிக்கித் தவித்து மீளவழியின்றிக் குற்றுயிரும் குலையுயிருமாக அனுங்கிய தமிழ்க் கவிதையைப் பரிவுடன் எடுத்தணைத்துப் புதிய உணர்வும் புதிய சுவையும் புதிய பொருளுமூட்டி, அழகு உடை சூட்டி, இனிய நடை காட்டித் தெருவெல்லாம் முழங்கச்செய்த பெருமைக்குரியவன் தேன் தமிழ்க் கவிஞன் பாரதி! பாரதியின் அடியொற்றித் தேன் பிலிற்றும் பாமலர்களால் தமிழன்னைக்கு எழில் சேர்க்கும் நவயுகக் கவிஞர்கள் தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் பலருளர். அவர்களுட் குறிக்கத்தக்க ஒருவர் கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம். அவருடைய இதயத்தின் குரலே "இன்ப வானில்" எதிரொலிக்கின்றது.

பெண்களை விட்டால், தமிழ்க் கவிஞர்களுக்குக் கவிதையே வராது எனச் சொல்லப் படுவதுண்டு. இதை முற்ருகத் தள்ளவும் முடியாது; முழுமையாக ஏற்கவும் முடியாது. கவிஞர் பஞ்சாட்சரம் அவர்களின் கண்களின் முன்னுலும் பெண்களே காட்சி தருகின்றனர். ஆனல், அவருடைய பார்வையோ, மற்றையவர்களினதிலிருந்து வேறுபட்டு நிற்கின்றது. பண்பும் கனிவும் பரிவும் நிறைந்த பார்வை அது.

பிரிவின் பெருந்துயரிற் பிறந்த பெண்களின் ஏக்கப் பெருமூச்சும் இதயக் கொந்தளிப்பும் கவிஞரின் நினைவை இழுக்கின்றன; நெஞ்சைப் பிழிகின்றன. நேர்மை உணர்விற் பிறக்கும் இந்த ஏக்கக் கவிதைகள் எம் நெஞ்சை நிறைக்கின்றன.

வண்டிலிற் கிடுகு ஏற்றிக்கொண்டு நேற்று விடிய நெடுவழி சென்ற கணவன், இன்னமும் வீடு திரும்பவில்லை. உயிர்க் கணவனின் பின்னே செல்லத் துடிக்கிறது அவளுடைய மனக்கண் பழக்கமின்மையால் வழி சரியாகத் தெரியவில்லை. முன்னர், அவன் அவளுக்குக் கூறிய சில செய்திகள் அவளுடைய நெஞ்சை இப்போது துளைக்கின்றன. வெருண்டடிக்கும் வெள்ளை நாம்பனையும், விழுந்து படுக்கும் கறுப்பு நாம்பனையும் பூட்டிக்கொண்டு சென்றவன், வழியில் என்னென்ன கஷ்டங்களை அனுபவிக்கின்றானோ!

''எந்த ஊரின் சந்தியில் தான்
இரவு படுத்துத் தூங்கினாரோ?
வந்த மழைக்கு வண்டியின் கீழ்
வாடிக் குந்தி ஏங்கினாரோ?''

ஒரு மாதிரிச் சமாளித்து, மாடுகளைத் தட்டிவிட்டுக்கொண்டு போனாலும், கிடுகுகளை விரைவிலே விற்று விட்டுத் திரும்பத்தான் முடியுமா? ''ஓட்டு வீடே எங்கும் இன்று! ஓலைக் குடிசை பத்துக்கொன்று!''

இந்தப் பிரிவு பொருள்வாயிற் பிரிவு! அவள் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் அவளுடைய குழந்தை சும்மா இருக்கிறதா?

''இரவில் பிள்ளை கனவில் எல்லாம்
'எங்கே அப்பா?' என்னும் ஏக்கம்!
உருக நெஞ்சம் பெருக விழிகள்
ஓயா எனக்கும் ஏது தூக்கம்?''

''சதங்கைச் சத்தம் கேட்காதோ?'' என்ற தலைப்புடன் யாழ்ப்பாணத்திற்கேயுரிய மண் வளத்திற் செழித்த சிறப்பான கவிதை இது.

கிடுகு வண்டிக்காரனின் மனைவி மட்டுந்தானா, கணவனுக்காக ஏங்கி ஏங்கித் தூங்க முடியாமல் தவிப்பவள்?

வலைஞன், வன்னிக் காட்டில் வயல் காப்பவன், இராரோ-ந்து சுற்றும் போலீஸ்காரன், தரகன், கிணறு வெட்டுபவன், கல் கிளப்புபவன், கள் விற்பவன், பூக்காரன், தவில் வித்துவான், லொறி ஓட்டுபவன்-இவர்களின் மனைவியர், இவர்களின் தொழிலை யும் திறமையையும் நினைந்து பெருமையும் பெருமிதமும் அடை கின்றனர்; அதே வேளையிற் பிரிவின் கொடுமையாற் பெருந்-துயரும் உறுகின்றனர். அவர்கள் சித்தம் கலங்கி ''மெத்தையில் நண்டாவதை'' ''முகத்தில் இருக்கும் பருக்கள் கிள்ளித் தூக் கஞ் சிதைப்பதை,'' ''புரண்டு நெளிந்து சுருண்டு படுத்தும்'' சுக முணராதிருப்பதை, ' நெஞ்சு மாண்டு நைந்து வேகுவதை'' கலை நயத்துடன் காட்டுகின்றார் கவிஞர்.

சோகத்தில் மட்டுந்தான் கவிஞரிடம் சுவையான கவிதை பிறக்கும் என்பதில்லை; காதலின் கனிவிலும் கற்கண்டுக் கவிதை பிறக்கும்.

அதோ, பெண்ணொருத்தி கிடுகு பின்னிக்கொண்டிருக்கிறாள். எப்படிப் பின்னுகிறாள் என்று பாருங்கள்.

''தென்னஞ் சோலை மணலிற் குந்தி
தின்னும் நோக்கில் குறும்பைச் சிந்தி
என்னை வண்டி மீதில் கண்டு கிடுகு பின்னுவாள்
—பொன்னி
என்னைக் கண்ணில் பின்னிப் பின்னிக் கிடுகும் பின்னுவாள்!

முன்னர் 'கிடுகு பின்னுவாள்' என்று சொல்லி, பின்னர் 'கிடுகும் பின்னுவாள்' என்று சொன்னதிலுள்ள அழகும் நயமும் தனி! மெல்லியலைப் படம் பிடிக்க மெல்லினத்தைப் பெய்து, இடை யிடையே இடையினத்தைக் கலந்த நயத்தைப் பாடிப் பாடி அனு பவிக்கலாம்.

''நீ வாழ நான் பார்க்க'' என்ற தலைப்பில் ''மஞ்சினிற்குஞ்சு! வண்டினப் பேடை! வண்டலிற் கண்டதோர் வஞ்சி!''

எனக் கொஞ்சு தமிழிற்பாடி நெஞ்சைத் தடவும் கவிஞர், கண்ணியம் மிகுந்த காதல் தியாகி ஒருவனை நமக்குக் காட்டுகின் றார்.

கொஞ்சிடற் குன்றன் கொவ்வைகள் வேண்டாம்
கொண்டவுன் சிந்தனை போதும்.........
.........தொட்டுனைத் தாலி கட்டிடல் வேண்டும்!
தோதிலே நானதற் கேழை!

கருத்தாலும் கவித்துவத்தாலும் உயர்ந்து நிற்கும் கவிதை இது!

கவிஞரின் பாட்டுக்களைப் பருகுகின்றாள் ஒருத்தி. அவளுடைய மனம் எப்படிப்பட்டது எனப் பார்ப்போமா?

ஈவிரக்கங் கொண்ட மனம்!
இனிய குணங் கற்ற மனம்! பொய்கள் என்னும்
நாவருத்தம் அற்ற மனம்!
நல்லதனை வாழ்த்து மனம்! நாட்டிற் கென்றன்
பாவிருக்கும் நெஞ்சை மிகப்
பயன்படுத்த வந்த மனம்... ...

இத்தகைய மனமுடையவள் பருகும் பாட்டு, ''யாவருக்கும் ஒத்து வரும்! யானிசைக்கும் தீங்கவிதை வாழும் என்றும்!'' என்கிறார் கவிஞர். உண்மை! ''அவளைச் சுற்றிய பாட்டு,'' படிப்போர் உள்ளத்தை என்றும் சுற்றியபடியே இருக்கும். ''பொய்கள் என்னும் நாவருத்தம்'' என்ற சொற்றொடர், தமிழுள்ளளவும் நிலைத்து நிற்கும்!

கவிஞரின் நகைச்சுவை உணர்வுக்கு ''காதலாகி...... பித்தனாகி......?'', ''மயங்கும் கண்ணுக்கு மனைவியாகி''—போன்றவை நல்ல உதாரணங்கள்.

கவிஞருக்குக் கவிதை கொடுத்தவர்கள், மன்னர் பரம்பரையினரோ, மாடி வீட்டினரோ அல்லர். இந்த மண்ணையே நம்பி வாழும் சாதாரண உழைப்பாளிகள். நாளிலும் பொழுதிலும் நாம் சந்திக்கும் சாதாரண மனிதர்கள். அதனாற்போலும் கவிதைகளில் ஓர் இயற்கைத் தன்மையை, இதய நெருக்கத்தை, எம்மால் உணர முடிகின்றது.

தூய சிந்தனை, துடிக்கும் உணர்ச்சி, துள்ளல் நடை, அளவான, அழகான அற்புதமான, சொற்பிரயோகம் — எல்லாம் கலந்த இந்தக் கவிதைகள் மோகன நிலவின் மூத்துச் சுடராய் இன்ப வானில் எழிற்கோலமிடுகின்றன.

—சிற்பி.

''கலைச்செல்வி''
கந்தரோடை,
சுன்னாகம்.

௧

# இன்னிசையே! என்செய்வேன்!

தோட்டவெளித் துலாவிருந்து
துண்டுதுண்டாய் இரவினிலே
பாட்டொன்று கேட்கிறது!
பாய்புலம்பத் தவிக்கின்றேன்!

தூக்கத்தால் என்நினைவால்
துலாச்சறுக்கி வீழாமல்
காக்கின்ற அப்பாட்டுக்
களிமின்னக் கேட்கிறது!

கூட்டிறைப்பால் அப்பாவின்
கூட்டாளி யாகியவர்
பாட்டிறைப்பால் என்னுள்ளம்
பாகாக்கி நிற்கின்றார்!

மயிலிறகுப் பொட்டழகின்
வண்ணமெல்லாம் நினைவுகளாய்
துயிலிடையில் கனிந்தெழவே
சுகங்கூட்டிப் பாடுகிறார்!

வாழைவெண்டி தினைப்புனங்கள்
வளமூட்டும் நீர்கடந்தும்
ஏழை சொக்கும் தூது சொல்லும்
இன்னிசையே! என் செய்வேன்!

# என்றும் அவர் பத்தினி நான்!

பெற்ற வர்க்கோ ஒன்பதிலோர்
பிள்ளை மட்டுமே — நானோர்
பிள்ளை மட்டுமே — என்னைச்
சுற்றி வந்த இனிய வர்க்கோ
தூய தெய்வம் நான்! — ஐயோ
தூய தெய்வம் நான்!

தூய தெய்வம் என்றுபோற்றித்
தொழவும் வந்தாரை — கண்ணீர்
சோர நைந்தாரை — அம்மா
நாயென் றுற்போல் 'சீ' யென் றேசி
நலிய விட்டாளே — ஐயோ
நலிய விட்டாளே!

என்றனுயிரும் உடல் பொருள்கள்
இதயம் எல்லாமே — தழுவ
இறைவன் ஈந்தார்க்கே — அப்பா
அன்று ''நீயிவ் வீடு வந்தால்
அழிப்பேன்'' என்றுரே — ''இவளை
அழிப்பேன்'' என்றுரே!

அன்று கண்ட அழுகைமுகம்!
அவரைக் கண்டிலேன் — இன்னும்
அவரைக் கண்டிலேன் — அந்தோ
என்றனுயிரும் நெஞ்சு மெல்லாம்
ஏங்கி அழுகிறேன் — உறக்கம்
இரவில் ஒழிகிறேன்.

சாதி பார்த்துச் சமயங்காத்துச்
சாக டித்தீரே — என்னைச்
சாக டித்தீரே! — அவரையே
மீதி நாளும் மனதில் அணைத்து
வேகும் உத்தமி — அறிவீர்!
மெய்மைப் பத்தினி!

# கொழும்பில் வேலை என்றால்....!

கடந்த இரவினில் என்மடிக் கிடந்து
கண்டொளி நிலவைக் களித்தவர்! இன்றே
நடந்து செல்வோர் கடந்து மிதிக்க
நடுறெயில் தரையில் தூங்குவர்! பாவம்!

மல்லிகைத் தோட்ட நறுமணம் நுகர்ந்து
மார்புற அணைக்க மயங்கித் துயின்றோர்
தொல்லைசெய் சாக்கடைத் துர்நெடி மாந்தித்
தூங்குவர் கொழும்பில் இனித்தனி யாக!

கலப்பட மற்ற கள்ளுடன் கோழிக்
கறியினை ஊரில் அருந்துவோர் பாச்சுக்
கலப்படச் சோற்றைக் கடைகளில் விழுங்கிக்
காற்றினை அங்கே குடிப்பரே! பாவம்!

இருந்திடில் இங்கே வருவிருந் தினரை
இன்முகங் காட்டி அனுசரித் துவப்போர்
வரின் அங்கு யாரும், வதிந்திடும் அறைக்கு
வருந்துவர் குந்தவும் இடமிலை என்றே!

'கொழும்பினில் வேலையில் அவரெ'ன்று கூறிக்
கொள்வதில் தோன்றும் பெருமிதம் எல்லாம்
புழுங்கிடும் துயரிவை பொறுத்திடும் பண்பை
போற்றுதற் கென்றோ! புரிகிற துண்மை!

# சதங்கைச் சத்தம் கேட்காதோ!

000○000

இவரைக் காணேமே! — இன்னும்
இவரைக் காணேமே!

தென்னங் கிடுகு வண்டி யேற்றிச்
சென்ற வர்தான் விடிய நேற்று!
இன்னும் வந்து சேர வில்லை!
என் றன் ஏக்கம் தீர வில்லை!

வெருளி மாடு வெள்ளை நாம்பன்!
விழுந்து படுக்கும் கறுப்பு நாம்பன்!
அருளல் வேண்டும் அய்ய ஞரே!
அவரைக் காக்க வேறு யாரே!

ஓட்டு வீடே எங்கும் இன்று!
ஓலைக் குடிசை பத்துக் கொன்று!
கேட்டி டாரேல் கிடுகு யாரும்
கேவி அவரின் நெஞ்சம் சோரும்!

எந்த ஊரின் சந்தி யில்தான்
இரவு படுத்துத் தூங்கி ஞரோ!
வந்த மழைக்கு வண்டி யின்கீழ்
வாடிக் குந்தி ஏங்கிஞரோ!

இரவில் பிள்ளை கனவில் எல்லாம்
''எங்கே அப்பா'' என்னும் ஏக்கம்!
உருக நெஞ்சம் பெருக விழிகள்
ஓயா எனக்கும் ஏது தூக்கம்?

வண்டி மாட்டுச் சதங்கைச் சத்தம்
வந்தென் காதில் வீழ்ந்தி டாதோ
கண்டென் னுயிரைத் தழுவிக் கொள்ளக்
கணத்தி லின்பம் சூழ்ந்தி டாதோ?

# மீன்பிடிக்கச் சென்ற அத்தான்!

கூடலின் காற்றில் குடிசைக் கூரை
கலங்கிச் சிலும்புதே—நெஞ்சம்
கலங்கிப் புலம்புதே—என்றன்
உடலின் உயிரின் ஜீவன் வள்ளம்
ஒன்றில் சென்றதே—ஐயோ
உணர்வு குன்றுதே!

தாழம் பூக்கள் காற்றுப் பிடுங்கித்
தரையில் இறைக்கிதே—அலைகள்
தரையைக் குறைக்கிதே—எனக்கு
வாழும் உலகம் கடலில் சென்றான்!
மனித வாழ்க்கையே—ஐயோ
வலைஞர் வாழ்க்கையே!

இருண்ட வானம் மின்னல் குலுங்கி
இடித்து முழங்குதே—மண்டை
வெடித்துக் குழம்புதே—உயிர்கள்
இரண்டின் மூச்சு இறையை நம்பி
ஏத்திப் போனதே—ஐயோ
என்ன ஆனதோ!

அயலும் கடலில் ஆண்கள் எண்ணி
அலறிப் பதறுறார்—சிறுவர்
அதிர்ந்து கதறுறார்—தெய்வச்
செயலோ அதோ! ஓ! தோணிக் கூட்டம்!
தெய்வம் தெரிகிறான்—எங்கள்
தேவன் அருளினன்!

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்
155720
700TCC

## மறந்து நின்றாரே!

பாறை மீதில் அவரிருப்பார்
பக்கம் ஒட்டி நானிருப்பேன்
ஆறு சூழ்ந்து பாடி ஓடுமே—நம்மை
ஆறு சூழ்ந்து பாடி ஓடுமே!

எனது கன்னங் குழிந்து மின்ன
இனிது பேசிச் சிரிக்க வைப்பார்!
தனிமை தந்து மேகம் மூடுமே—நம்மைத்
தனிமை தந்து மேகம் மூடுமே!

வீங்கு சுனையில் மிகுந்த பூக்கள்
மீது வண்டு பாடல் காண
ஓங்கு மூங்கிற் சாரல் நல்குமே—இடமும்
ஓங்கு மூங்கிற் சாரல் நல்குமே!

என்னைக் கூவி அவரழைப்பார்
எல்லா மலையும் எதிரொலித்துப்
பென்னம் பெரிது காதல் என்னுமே—நம்முள்
பென்னம் பெரிது காதல் என்னுமே!

இனித்த இந்தச் சூழல் தன்னை
எரிக்கும் துன்பச் சூழலாக்கித்
தனிக்க என்னை விட்டுச் சென்றாரே—இரவில்
தவிக்க விட்டு மறந்து நின்றாரே!

வன்னி வயலில் வேலை செய்து
மாதம் ஒன்றில் பணங்கொணர்ந்து
உன்னை மணந்து கொள்வேன் என்றாரே—இதழ்கள்
உப்பி இனிக்க உமிந்து சென்றாரே!

காங்கை வன்னிக் காட்டில் அவரின்
காதல் உணர்வு வரண்டதாமோ
தூங்க வில்லை நானிங் கேதனி!—இளமைத்
துள்ளும் உணர்வை மீட்டு தே.பனி!

# தூக்கமின்றி முடித்திடுவாளே!

தென்னஞ் சோலே மணலில் குந்தி
தின்னும் நோக்கில் குறும்பைச் சிந்தி
என்னை வண்டி மீதில் கண்டு கிடுகு பின்னுவாள்—பொன்னி
என்னைக் கண்ணில் பின்னிப் பின்னிக் கிடுகும் பின்னுவாள்!

முன்னால் என்றன் விழியைக் கொஞ்சி
பின்னால் தந்தை பார்வைக் கஞ்சி
முன்னும் பின்னும் பார்த்து வேர்த்துக் கிடுகு பின்னுவாள்
—ஏங்கி
முன்னும் பின்னும் பார்த்து வேர்த்துக் கிடுகு பின்னுவாள்!

பேரம் தந்தை யோடு பேசி
பாரம் கிடுகை வண்டியில் வீசி
ஈரம் கொண்ட என்றன் மேனி பார்த்து நாணுவாள்
—குடிசை
ஓரம் நின்று தேனீர்ச் சிரட்டை அனுப்பிக் காணுவாள்!

தன்னந் தனியாய் ஒரு நாள் கண்டாள்
தன்னை மறந்த துயர்வெறி கொண்டாள்
என்னை நோக்கி ஓடி வந்து கட்டித் தழுவினாள்
—நெஞ்சாற்
பொன்னி கண்ணீர் என்றன் மார்பில் கொட்டிக் கழுவினாள்!

இந்த நிலவு சிந்தும் இரவில்
அந்தச் சோலைக் கேணி யருகில்
நொந்த மேனி மணலில் புரண்டு துடித்திடுவாளே—ஐயோ
இந்த இரவும் தூக்க மின்றி முடித்திடுவாளே!

16

# வெயிலோ! மழையோ! என்றேங்க!

மஞ்சள் மாலை விண்மீதில்
மண்டும் பறவைக் கூட்டங்காள்!
கொஞ்சி நீவிர் செய்கோலம்
கூறுங் கீச்சுக் கற்பனைகள்
நெஞ்சில் தேனை வார்ப்பதெலாம்
நினைவீர் என்றன் கண்ணுளன்
'வஞ்சி' என்றென் பக்கலிலே
மகிழும் அந்த வேளைதான்!

கள்ளி வேலிக் காடெங்கும்
கத்தும் ஓலைப் பனையெங்கும்
வெள்ளி ஓடைக் கரையெங்கும்
வெட்டும் அரிவி வயலெங்கும்
துள்ளுங் காளைத் துணையோடு
துய்த்து மேய்ந்து புல்மீளுங்
கள்ளப் பசுவே! மணியோசை
கணவர் இன்றி வேம்பாகும்!

சிரிக்கும் முல்லை மலரே! என்
சிறுபல் வரிசை முறுவல் முன்
எருக்கே நீயென் றென்மன்னர்
இகழும் போதும் இரவங்கு
விரிக்கும் போர்வை இருளுன்றன்
விஞ்சும் ஒளிமுன் விழலாகப்
பெருக்கும் வாசம் என்னுள்ளம்
பிணிக்கும்! அதுவும் இன்றல்ல!

"மயிலே! வருவேன் மறுதிங்கள்!
மகிழ்வோம்!" என்றே எழில் வண்ணம்
பயிலுங் கையால் என்கண்ணீர்
பரிந்து நீக்கி என்நெஞ்சம்
"வெயிலோ மழையோ" என்றேங்க
வெளியூர் சென்றார் பொருள் தேட!
"குயிலே" என்றிங் கவர்வந்து
குதிக்கும் அந்நாள் இனிதெல்லாம்!

# காலைகளை முத்தமிட்டு...!

மரந்தறித்துக் காடெ ரித்து விதைத்த நெல்வயல்—உச்சி
மரத்துக் கிளையிற் பரணில் குந்திக் காப்பர் காடயல்!-எண்ணி
இரங்கி ஏங்கி இரவி லிங்கே நான்ப தைக்கிறேன்—முகத்தில்
இருக்கும் பருக்கள் கிள்ளிக் கிள்ளித் தூக்கஞ் சிதைக்கிறேன்!

கொப்புத் தாவும் மந்தி கூரை பிய்த்துப் பரண் விழின்—மூடக்
கோபத் தாலே அவரைக் கடிக்க மந்தி நினைந்தெழின்—அம்மா!
அப்போதவரவ் வுயரம் நின்று நிலத்தில் வீழ்ந்திடின்—இரைக்காய்
அங்கே கரடி புலிகள் சூழின் காக்க எவருளர்?

மதங்கொள் யானை மரம சைக்கில் பரணும் நொருங்குமே—அவரும்
மண்ணில் காய்போல் வந்துவீழின் யானை நெருங்குமே—பகலில்
பதுங்கிக் கிடக்கும் இந்தப் பயங்கள் இரவின் தனிமையில்—நெஞ்சு
பதைத்துப் பதற உலுக்கி டுகுதே ஈசா காத்தருள்!

சூடு வாங்கும் புலிகள் சுட்ட திசைக்கே பாயுமாம்—அவருஞ்
சுட்டாற் புலியை அவரின் கதியும் என்னவாகுமோ!—இன்றும்
வீடு விட்டுக் கிளம்பும் போதும் 'கவனம்' என்றுநான்—கெஞ்சி
வேண்டி நின்றேன்! மறக்கில் எல்லாம் என்ன செய்வேனோ!

புயலும் மழையும் வந்தாற் பரணில் இருக்க முடியுமா—இறங்கி
புகுந்து தங்கக் காட்டில் வீடும் இருக்கமுடியுமா-செய்யும்
செயலறி யாமல் வீடு நோக்கி இருட்டில் கிளம்பிடில்—காட்டில்
திரியும் கரடி புலிகள் யானை தீங்கு செய்யுமே!

ஏழை என்றன் அன்பிற் காக எத்தனை யிழந்தார்—காக்கும்
இனமிழந்தார் தொழிலி ழந்தார் சீதன மிழந்தார்—தானும்
ஏழை யாகி என்னால் இந்தக் காடு வந்தாரே—பாவம்
இரவும் பகலும் விழித்து ழைத்தே மாடாய் நொந்தாரே!

இந்த நொடியில் இருந்தோ யாமல் அவரின் கால்களை—கையால்
இறுகக்கட்டிக் கொண்டு நானி றக்கும் வரையிலே—முத்தம்
தந்து தந்து கிடக்க நெஞ்சம் ஏங்கித்துடிக்கிறேன்—அவரை
தாங்கி நாளும் காக்க அம்பாள் காலைப் பிடிக்கிறேன்.

# பொன்னிரவில் பின்னமூரு!

பொன்னிரவை மண்ணுக்கிப்
 பொலிஸ் நிலைய ஜாகையிலே
 புழுவாக நான் நெளிந்து
 புல்லுகிறேன் தலையணையை!
என்னை யிங்கு தவிக்க விட்டும்
 இராரோந்து சுற்றுதற்காய்
 ஏகிநகர் காக்கின்றார்!
 எனக்கு மட்டுங் காவலில்லை!
பின்னிரவும் வந்ததையோ
 பேதையெனக் கிரங்காரோ?
 பின்னிவிழி பூசலிடப்
 பேசாரோ மேனியினுல்?

வீடுறவு சுற்றங்கள்
 விட்டவர்பின் னுல்வந்தேன்!
 வெந்திரவில் நெஞ்சுருகி
 மெத்தையினில் நண்டானேன்!
நாடுநகர் காப்பதிலும்
 நல்லமைதி நாட்டலிலும்
 நரித்தனங்கள் கொல்வதிலும்
 நாட்டமுள்ள என்தலைவர்
ஓடிவந்து தழுவாரோ?
 உருவற்ற ஒருகறையான்
 உள்ளமுடல் தமையரித்தே
 உண்ணு முனம் காப்பாரோ?

வெந்துடலம் குப்புறநான்
மெத்தையிலே! சுவரினிலென்
விம்முகின்ற பின்னழகின்
விரி நிழலோ கொன்றிடுதே!

சந்திதெருச் சண்டையிடும்
சண்டியரை நள்ளிரவில்
தள்ளிவந்து சிறையிலிடும்
சாகசத்தில் சென்ருரே!

கொந்தியுடல் உள்ளிருக்கும்
கூற்றுவனுக் கம்பெய்து
குதித்தோட வைக்காரோ!
குழந்தையெனத் தேற்ருரோ!

★

20

## போங்கள்! போங்கள்! கோபம்!

◆◆◆◆◆◆◆◆

தூரகு வேலை தூரகு வேலை என்று பறக்கிறார்—இருப
திரவும் தொடர்ந்து வருந்தி ஏங்க என்னை மறக்கிறார்!
பெரிய மனிதர் மனங்கள் கூட மயக்கிப் போடுறார்—தூரகில்
அரிய செயல்கள் எளிதில் முடித்துச் செல்வந் தேடுறார்.

கனித்த என்றன் கன்னங்கிள்ளிக் கொழும்பு சென்றவர்—''ஏக்கம்
சனிக்க முன்னர் பனிக்கு முன்னர் மீள்வென்'' என்றவர்!
இனிக்கும் வடிவும் இனிக்கும் குரலும் எங்கே? ஐயகோ—நொடியும்
தனித்திருக்க முடிய வில்லை! ஏது செய்குவேன்!

மருண்டு மருண்டு மாடிப் படிகள் பார்த்தும் பயனில்லை—மெத்தைப்
புரண்டு நெளிந்து சுருண்டு படுத்தும் உணர்ச்சி விடவில்லை!
இருண்டு பொழியும் மழையின் குளிரும் தூக்கம் தரவில்லை—கண்ணீர்
வரண்ட பின்னும் கண்ணில் கொடிய தூக்கம் வரவில்லை!

வரட்டும் திரும்பி! ''போங்கள்! போங்கள்! கோபம்!'' என்னுவேன்—
''கொஞ்சி
மருட்டி என்னைத் தவிக்க விட்டீர்! போங்கள்'' என்னுவேன்!
இருட்டில் அதோ ஓ! வந்து விட்டார்! எழுந்து பறக்கிறேன்—என்றன்
வரட்டுக் கோபம் பறக்கத் தழுவி என்னை மறக்கிறேன்!

## நீவாழ... நான்பார்க்க...!

மஞ்சினிற் குஞ்சு வண்டினப் பேடை
வண்டலில் கண்டதோர் வஞ்சி!
நெஞ்சினில் தங்கும் நீல்நிறத்தெய்வம்!
நீரிடைக் கருமலர்! என்று
பஞ்செனும் பாங்கில் பாவிடென் உள்ளம்
பாடிடும் காரெழிற் கன்னீ!
கொஞ்சிடற் குன்றன் கோவ்வைகள் வேண்டாம்!
கொண்டவுன் சிந்தனைபோதும்!

155720

வெள்ளையுன் உள்ளம்! வெள்ளையுன் பேச்சு!
வெள்ளமென் மீதிலுன் அன்பு!
கொள்ளையுன் கல்வி! கொள்ளையுன் பண்பு!
கோதிலை! என்றெணும் போது,
துள்ளிடுஞ் சிந்தை தோன்றிடும் எண்ணம்
சொல்லவா? ஆயிரங் கோடி!
கிள்ளையே! தந்தாய் தேன்நினைப் பின்பம்!
கேட்கயான் உள்ளதோ இன்னும்?

கட்டிலில் உன்றன் பட்டுடல் தீண்டில்,
கற்றிடில் இல்லறப் பாடம்
வட்டிலிற் சோறுமகவினுக் கூட்டில்
மழலையிற் கண்டிடில் தெய்வம்
தொட்டுனைத் தாலி கட்டிடல் வேண்டும்!
தோதிலை நானதற்கேழை!
எட்டி நின்றின்பம் நீ பெறத் தொழுவேன்!
எய்திடநீ கெண்ணுதல் ஆசை!

பொது சன ...
யாழ்...

# அவள் கூண்டு! நான் பறவை!

கூட்டை விட்டு வெளியில் பறவை விரட்டப்பட்டது—துயரக்
கொடும் நெருப்பு பறவை சிறகை வாங்கி சுட்டிடும்—நொந்த
கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்து பறவை கதறுது—கூடு
குழைந்து நொந்து பார்த்திரங்கி இதயம் பதறுது!

கூடு விட்டுக் கூடு பாயப் பறவை விரும்பலே—நெஞ்சம்
கொஞ்சங் கூட மறதி என்ற பக்கந் திரும்பலே—அன்று
கூடு நீக்கப் பட்ட பறவை இன்னும் குந்தலே—தூக்கங்
கொள்ள வில்லே உண்ண வில்லே ஓய்வு கொஞ்சலே!

இந்தப் பறவைக் கென்றோ ஓர்நாள் தன்னைத் தந்திட—கூடு
ஏங்கி உயிரை மாய்த்திடாமல் தன்னைத் தாங்கிது—எண்ணி
வந்தால் குந்த வேறு பறவை என்றும் அஞ்சுதே—இன்ப
வடிவு குன்றி அணுவ ணுவாய்த் தேய்ந்து துஞ்சுதே!

பறந்து பறந்து குந்தி டாமல் பறவை மாய்ந்திடும்—உயிரே
பறந்த பின்னர் பிணமதாகி மண்ணில் சாய்ந்திடும்—''ஐயோ
இறந்து போகப் போகி றீர்கள்! என்னை மறந்து போய்-அன்பே
இன்னோர் கூட்டில் தங்கிடுங்கள்'' கெஞ்சுங் கூண்டது!

கூண்டைச் சுற்றிப் பறந்து பறந்து செத்துப் போவதில்-இந்தக்
குருவி நெஞ்சில் கோடி இன்பம்! துன்பம் பெரிதில்லே—நெக்கி
மாண்டு மாண்டு பறவைக் காகத் தானெடுங்கலில்-கூண்டும்
வாழ்வு கண்டு மனதுள் சாந்தி தானடைந்ததோ?

23

# பக்தா! சேவை போதும்!

வன்னிக்காட்டில் எருவு வைக்கோல் ஏற்றிடப் போவார்—பனையில்
தென்னங் காட்டில் தேங்காய்ப் பாரம் ஏற்றிடப் போவார்
என்னை வீட்டில் ஏங்க விட்டே இரவை நீட்டுவார்—கள்ளுத்
தன்னைப் போட்டுக் கண்விழித்து லொறியை ஓட்டுவார்!

சுருட்டுப் பெட்டி வாழைக் குலைகள் காய்கறி ஏற்றி—கண்ணை
மருட்டும் வண்ணச் சேலைப் பொதிகள் ஊர்களுள் ஏற்றி
இருட்டில் கண்டி நகரப் பக்கங் கொண்டு செல்கிறார்—என்னை
வருத்தத் தோடு வாரி யணைத்து வாடிச் செல்கிறார்!

பாவம் தனியாய் அவளங் கென்று தவித்திடுவாராம்—வீடு
போவம் திரும்பி வழியில் என்றும் பதைத்திடு வாராம்!
ஆவல் பொங்கி அள்ளி அணைக்கத் துடித்திடு வாராம்—"பக்தா!
சேவை போதும்" கிண்ட லெண்ணிச் சிரித்திடுவாராம்!

காட்டு வழியில் கிடங்கு முடங்கும் ஓட்டம் தடைசெயின்—கொடிய
காட்டு யானை புலிகள் அவருக் கின்னல் புரியுமே!
ஓட்டும் போதுந் தனைமறந்து கண்ண யர்ந்திடின்—கண்டி
நாட்டு வீதிப் பள்ளந் தன்னில் லொறியும் பாயுமே!

கொள்ளைக் கூட்டம் தனியிடத்தில் வழிமறிக்குமே—அச்ச
நள்ளி ராவில் முனிகள் பேய்கள் மனங் கலக்குமே!
கள்ளை அதிகங் குடித்து விட்டால் கவனம் அழியுமே—ஊரில்
உள்ள தெய்வம் யாவும் வேண்டி உயிர்கு லைந்தேனே!

ஏங்குவதென்றால் இரண்டு நெஞ்சும் ஏங்குகின்றோமே—இன்பில்
ஓங்குவதென்றால் ஒருமை எய்தி ஓங்கு கின்றோமே
தூங்குவ தென்றால் இரண்டு நெஞ்சும் தூங்குகின்றோமே—உயிர்கள்
நீங்குவ தென்றால் ஒன்று சேர்ந்தே நீங்கவும் வேண்டும்!

# ஏங்கிநோக்கி நின்ருளே!

முட்டி மோதி முயங்கும் ஆட்டின் கூட்டமே—உங்கள்
பட்டிக் காவல் இரவில் எனக்கு வாட்டமே!
மட்டை வரிச்சுச் சுற்றிக் காவல்
அட்டாளைமேல் நானுங் காவல்
கொட்டம் அடிக்கக் குறைச்சலென்ன ஆடுறீர்—தூக்கம்
கிட்டவிடீர் குதித்துப் பேசிக் கூடுறீர்!

தனிய இந்தப் பரந்த வயலின் வெளியிலே—குந்திப்
பனியின் நடுங்கும் வாடைக்காற்றின் குளிரிலே
மனங்கசிந்து குடிகள் திக்கில்
எனைமறந்து விழிபதிக்கில்
இறங்கி அவளை நோக்கி ஓடத்துடிக்குமே—நெஞ்சம்
உறங்கிடாத அவளைத்தழுவென் றிடிக்குமே!

பட்டி காக்கக் கிளம்பிநின்றேன் உருகியே—அவளும்
பெட்டிச் சோற்றை நீட்டி நின்ருள் அருகிலே
ஏங்கி என்னைப் பார்த்து நின்ருள்
வீங்கும் கண்கள் நீர்த்து நின்ருள்
பாய்ந்து பேதை தனையணைத்துப் பதறினேன்—சோகம்
தேய்ந்து போகும்மட்டும் நெஞ்சில் கதறினேன்!

என்றன் காவல் நண்ண நல்கப் பட்டாளை-தூக்கம்
குன்றவிட்டிங்கேறியுள்ளேன் அட்டாளை!
கள்ளர்க்கஞ்சிக் காவல் ஐயோ!
கள்ளர்க் கன்புத்துயரில்லையோ?
விடியும் மட்டும் விழித்திரங்கி ஏங்குவோம்—பகலில்
முடியும் மட்டும் தனித்தனியே தூங்குவோம்!

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்



# எது கை? இங்கே நீட்டு!

அவள்:

அத்தான்! அத்தான்! நீங்கள்
முத்தாய்க் கவிதை பாடும்
முறையைச் சொல்லு வீரோ?

அவன்:

எதுகை வேண்டும் எதுகை!
எது கை? இங்கே நீட்டு!
இணைய வேண்டும் இதுபோல்!

அவள்:

ஐயோ ஐயோ வேண்டாம்!
கையை விடுங்கள் அத்தான்!
கண்டு விட்டால் பாட்டி?

பாட்டி:

என்ன 'மோனே' என்ன?
என்னைக் கூப்பிட்டாயோ?
என்ன வேண்டும் சொல்லேன்!

அவன்: (மெல்ல)

மோனே வேண்டும்! மோனே!
தேனைப் பாட்டில் வார்க்க
தேவை இந்த 'மோனே'!

அவள்:

போதும் அத்தான்! போங்கள்!
காத லட்குக் கூர்மை!
கவிகட் குள்ள நோய்தான்!

அவன்:

கவிஞ ராக வேண்டில்
சுவைஞ ராக வேண்டும்!
''சுச்சுச்''—இதே போல!

அவள்:

சொக்கை நொந்த தையோ!
வெக்கை! காதல் வெக்கை!
வேண்டாம்! கவிதை போதும்!

# காதலாகி......பித்தனாகி......?

•••○○○•••

சின்னவளை என்னவளைத் திடுமென்று பிரித்ததனால்
என்னையே என்னைவிட்டுப் பிரித்தவனே ஏ! இறைவா!
உன்னைநான் இன்றேதான் கண்டேன் டா! உதையீதோ!
தென்னைக்கா உதைந்திட்டேன்? சிந்திரத்தம் நொந்ததுகால்!

தேடியுன்னை வீடுவந்தால் சிரித்துவந்து நின்றவளே!
"போடி கள்ளி! கோபம்!" என்றால் புழுவாகித் துடித்தவளே!
வாடி! என்றன் சிறுகுழந்தாய் மடிமீது! ஆரிரரோ...
மூடிகண்! அடஇதுவும் முழுக்கல்லே! ஐயோ! ஹோ!

தடுமாறும் என்நெஞ்சில் சாந்திதந்த அன்புருவே!
அடிதாயே! எரிந்தலையும் ஆறுஎன் நெஞ்சாற
மடிதாராய் தலைவைக்க! வந்தீதோ சாய்கின்றேன்!
அடித்தாயே காலாலே? அடமாட்டி ஊபடுத்தேன்?

இரைந்துவருங் காற்றிடையில் இருள்நெருங்கும் நள்ளிரவில்
கரைந்துருகி ஏன்நின்றாய் காதலியே! எனக்காயோ?
விரைந்தணைப்பேன்! உன்னிதழில் விருந்துவைப்பேன்! கொஞ்சுகிறேன்
சொரிந்திரத்தம் நோமுதடு! தொட்டதுமுள் முருக்கினையோ?

தெய்வமவள் உறைகின்ற திருக்கோயில் நானறிவேன்!
செய்வதற்கென் றுள்ளதினிச் செல்வதுதான் அவள்வீடு!
மையிருளில் அவள்வீட்டு வழியினிலே ஓடுகிறேன்!
ஐயையோ பாழ்ங்கிணற்றில் ஆ வீழ்ந்தேன்! பாம்புமதோ!

# பிறவிதோறும் தங்கள் சொத்து!

இன்றெனக்கும் வயதிருக்கும் எண்பது—தெய்வ
இதயமுள்ள பத்தினிக்கும் எழுபது—தூக்கிச்
சென்று வைத்தார் நோய்மனையில் அவளை! நொந்தேனே—தனிமை
தின்னத் தின்னக் குடிசையிலே இதயம் வெந்தேனே!

சின்னவளாய்க் காதல்செய்த இளமையில்—நமதென்
செல்வமயிரும் உடலுமென்ற இளமையில்—அன்று
சொன்னதெல்லாம் தந்து மேலும் சொர்க்கம் தந்தாளே—இன்று
துடிக்கும் பிரிவில் என்னைவிட்டுத் தானும் நொந்தாளே!

உயிரைவைத்தேன் தங்கள் மேலே என்பவள்—தங்கள்
உயிர்பிரிந்தால் உடனிறப்பேன் என்பவள்—வந்த
துயரில் தேற்றிச் ''சிரியுங்களேன்'' என்று தழுவுவாள்—இன்றென்
துயரம் நெஞ்சத் திரையில் கண்டாள் அங்கே அழுகிருள்!

அடிக்கொருக்கால் பசிநடுக்க வருந்துவாள்—என்னை
அன்றிவேறு யார்கை யாலும் அருந்திடாள்—என்றே
படுக்கை மீதங் கழுவள்? பசியும் மறந்துபதைக்கிறேன்—''அம்மா
பசிக்கவில்லை'' என்று தனியக் குந்திக் கதைக்கிறேன்!

பல்லிழந்த நானும் தானும் சுவைக்கவே—முதுமைப்
பகறுங்கையால் வெற்றிலை பாக்குத் துவைப்பளே—எங்குஞ்
செல்லப் பாதிக் குருடன் என்னைத் தாங்கிச் செல்லுவாள்—தாகத்
தீயில் பசியில் காத்தென்னைப்பேரிறையை வெல்லுவாள்

''தாலியோடு சாகவேண்டும்'' சொல்லுவாள்—உதவத்
தங்கட் காரோ என்றும் பதறிப் புல்லுவாள்—முதுமைக்
காலந் தன்னில் இருவருக்கும் ஏக்கம் ஒன்றுதான்—உயிர்கள்
கைகள் கோத்து வானஞ் செல்ல வேண்டும் என்றுதான்!

பிறவி தோறும் முன்பு தங்கள் பத்தினி—அடுத்த
பிறவி தமிலும் தங்களுக்கே பத்தினி—என்பாள்
அறிவு மயங்கி அதோ ஒ அங்கே சாவில் துடிக்கிருள்—எனக்கும்
ஐயோ நெஞ்சு வலித்து மூச்சுத் திமிறி வெடிக்கிறே...!

# குழைந்து கன்னந் தட்டி!

இணற்று வெட்டிக் கூட்டத்திலே சேர்ந்து—பிரிய
இணக்க மின்றிப் பிரிந்து சென்றார் சோர்ந்து!
பணத்திற் காகக் கிணறு தோண்டி வாடுவர் அங்கு—இரவென்
அணைப்பிற் காக ஏங்கு வாரே குடிசையுள் அங்கு!

மணம்பு ரிந்தோர் மாதங் கூட இல்லை—பத்துக்
கணங்கள் கூடப் பிரிந்தி ருந்த தில்லை!
அணிந்தெ னக்கே அழகு பார்க்க அட்டிய லொன்று—வாங்க
திணிந்த ஆசை உந்தப் பாவம் சென்றாரே அன்று!

அட்டி யலுமேன்? தங்க ளன்பே போதும்!—என்று
தொட்ட ணைத்தேன் நெஞ்சி லன்பு மோதும்!
அட்டியலுக்கும் தாலி பெரிது என்று பதறினேன்—கிணறு
வெட்டும் வேலை ஆபத் தென்று கெஞ்சிக் கதறினேன்

''பெட்டைப் புத்தி'' குழைந்து கன்னந் தட்டி—அச்சம்
விட்டி டென்றார் சிரித்துக் கண்சிமிட்டி!
வெட்டிக் கல்லும் மண்ணும் அள்ளி இழுப்பரே கப்பி—வெடிக்கும்
இட்டுத் தீபாய்ந் தேணி யேறிப் பறப்பரோ தப்பி?

ஆண்ட வா! நீ அவரை அங்கு காப்பாய்!—கெஞ்சி
வேண்டு கின்றேன் ஏழை தாலி காப்பாய்
மீண்டு வந்து விடிலோ என்றும் போக விடேனே—நெஞ்சு
மாண்டு நைந்தி ராவி தைப்போல் வேக விடேனே!

# விதவையின் நோன்பு!

ஊருல கொன்று திரண்டொரு காலம்
ஓஹோ ஹோ என்றுசி ரித்தாலும்—நகை
ஓசை உலகை நிறைத்தாலும்—அன்பு
சேரத் தழுவிப் பிரிந்தவர் விம்மித்
தேம்பொலி ஒன்றேஎன் காதில்படும்—சுடர்த்
தீத்துளி கோடியென் நெஞ்சைச் சுடும்!

மானிடர் மீனினம் பட்சி விலங்குகள்
வந்தெனைச் சூழ்ந்தோல மிட்டாலும்—அழும்
மாத்துயர்க் கண்ணீரை விட்டாலும்—எனைத்
தேனிடை ஆட்டிப் பிரிந்தவர் மெல்லெனத்
தேம்பொலி மட்டுமென் காதில் விழும்—அவர்
சிந்தனை யால் என்றன் நெஞ்சம் அழும்!

சீற்றம் சிரிப்பிகழ் வின்னல் வெறுப்பெனச்
செப்பும் சுவைபல சூழ்ந்தாலும்—மக்கள்
சிந்தனை அன்னவற் றூழ்ந்தாலும்—எனைப்
போற்றிச் சுகித்துப் பிரிந்தவர் நொந்தழும்
போழ்தின் முனகலே நான் கேட்டேன்—நெறி
போக்கும் மனநரம் பேமீட்டேன்!

# சேர்ந்தும் புரள!

தூங்கற் கரிதாம்
தண்ணென் வாடை தனிற் கூனி
காங்கைப் போர்வைக்
கம்பளி மகனுந் தூங்கிட்டான்!
ஓங்கிச் சினந்த
ஓர்தீ என்னுள் அசைந்தாடி
வாங்கிப் பிழியும்
வாடென் உயிரை என்செய்வேன்!

வீங்கிப் பொழியும்
வெண்பனித் தூறல் வீழ்வேந்தித்
தாங்கித் துளியாய்த்
தருவின் இலைகள் பொட்டென்று
மூங்கிற் குடிசை
மூடிய வைக்கோற் கூரையெல்லாம்
தீங்காய்ச் சொட்டும்
சிலிர்ப்போ என்னைத் தின்றிடுதே!

பாலத் தடியில்
பசும்புல் மண்டிய ஓடையில் நீர்
ஓலத் துருகி
ஓடொலி நெஞ்சில் கவிகிறதே!
மேலைச் சாரல்
காடெரி கின்ற வெளிச்சங்கள்
ஆலை காக்க
அகன்றூர் நினைவால் அலைத்திடுதே!

தும் தும் மென்று
        தூரத் தில்ஒரு குடிசையிலே
வம்பச் சிறுவர்
        மத்தளங் கொட்டிப் பாடுகிறார்!
வெம்பிக் கனலும்
        மேனி எங்கும் தகிப்பாற
செம்பில் நீராய்த்
        தீண்டித் தழுவ வருவாரோ!

''பொன்ரதம்'' என்றவர்
        புகழும் பளிங்கு மேனியெலாம்
செந்நெருப் புணர்வில்
        தீய்ந்திட வியர்வை முத்தூற
என்னை மறந்தே
        இருளில் தரையில் புரள்கின்றேன்!
தின்னுங் குளிரில்
        சேர்ந்தும் புரள வருவாரோ!

★

32

# மயங்கும் கண்ணுக்கு மனைவியாகி...

கள்ளுக் கொட்டிற் பனைகள் காட்டுப் பக்கமே—இருளைக்
காந்து தந்தோ தீக்கொ ழுந்தின் வர்க்கமே—அவர்தான்
மெள்ளப் பனையில் குளவிக் கூடு கொளுத்து கின்றாரோ—இல்லை
வெறியர் மோதிக் கள்ளுக் கொட்டில் கொளுத்தி நின்றாரோ?

வாடிக் கைக்கள் வைக்க மறந்து சண்டையோ—கடனாய்
வார்க்க வில்லைக் கள்ளை என்று சண்டையோ—பேச்சு
வேடிக்கையே வினையில் முடிந்து வந்த மோதலோ—எங்கோ
வீழ்ந்த காசை இவரைக் கேட்டு விளைந்த சேதமோ?

மயங்கும் வெறியன் கண்களுக்கு மற்றோராள்—அருமை
மனைவி யாகத் தெரிந்ததாலே சண்டையோ—கள்ளை
நயந்து குடித்துக் கடிக்க இறைச்சி இல்லை என்றாரோ—அதனால்
நாசஞ் செய்ய எண்ணிக் கொட்டில் எரித்து நின்றாரோ?

பொழுது பட்ட பின்னர் வேண்டாம் என்றேனே—இனிமேல்
போதும் மாலை வரையும் விற்ப தென்றேனே—ஏங்கி
அழுது கலங்கிப் புலம்பு கின்றேன் என்ன ஆனாரோ—நேரம்
ஐயோ பத்து மணியா யிற்று! திரும்பி வாராரோ?

நஞ்சுக் கள்ளை விற்று நஞ்சு தேடுறார்—கள்ளால்
நாச மாகும் குடும்பத் தோர்கள் வாடுறார்—பகலும்
அஞ்சி அவரின் உயிரை எண்ணி ஏங்கு கின்றேனே—இரவில்
அமைதி குன்றி ஆவி வெந்து நடுங்கு கின்றேனே!

## என்ன உறவோ

அவளென்றன் அன்னையு மல்லள்
ஆருக்கும் அன்னையு மல்லள்
ஆனாலும் அவளரு ளுள்ளம்
ஆளாமல் ஆள்கிற தென்னை!

அவளென்றன் தங்கையு மில்லை
ஆருக்கும் தங்கையு மில்லை!
ஆனாலும் அவள்படின் இன்னல்
ஆறாமல் அலறுமென் நெஞ்சம்!

அவளென்றன் மனைவியு மல்லள்
ஆருக்கும் மனைவியு மல்லள்
ஆனாலும் அவளது தூய்மை
அடியானாய் ஆக்கிடு தென்னை!

அவளென்றன் உறவினள் அல்லள்
ஆனாலும் ஆடவர் அண்மில்
அரவைப் போல் சீறிடு கின்றேன்
ஆமாம்இதை எவ்வுற வென்பேன்!

# அவளைச் சுற்றிய பாட்டு!

திண்ணையிலே தவமிருந்து
சிறுகவிதை செய்திடுவேன் அந்நாள்! இன்றே
பண்ணைமலர்ப் பஞ்சணைநேர்
பாவைமடி மேற்கிடந்து பாடுகின்றேன்!
வெண்ணிலவில் வெள்ளிகளில்
வெளிகளிலே கற்பனைகள் மின்னும் முன்நாள்!
எண்ணுகையில் கள்சொரியும்
இவள்கண்ணில் மின்னுமவை பலவா யின்றே!

தென்றல் தொடும்! தினைக் கூந்தல்
சிலுசிலுக்கும்! சிறுகுருவி கீச்சுக் கேட்கும்!
அன்றுவரும் ஆனந்தம்!
ஆடிவரும் தேன்கவிதை! ஆனால் இன்றே
அன்றிலென அரைநொடியும்
அகலவிடா அவள்பார்வை வாயின் முத்தம்
நின்றுநிலைத் தோங்குமெழில்
நெஞ்சள்ளும் கவிதைசெயும் வேகம் நல்கும்!

பத்துவர நூறுவரப்
பணமாக, பாடிடுவேன் அந்நாள்! இன்றே
முத்துவரும் வெண்ணகையாள்
முயல்விக்கப் பாடுகிறேன்! முன்போ யார்க்கும்
ஒத்துவரும் மரபுண்டென்
கவிகளிலே! உண்மைதான்! இன்றே காதற்
சொத்துவர அவள்கண்ணில்
தொகையாகச் சுவையுண்டு மரபும் உண்டு!

ஈவிரக்கங் கொண்டமனம்

இனியகுணங் கற்றமனம் பொய்கள் என்னும்

நா வருத்தம் அற்றமனம்

நல்லதனை வாழ்த்துமனம் நாட்டிற் கென்றன்

பாவிருக்கும் நெஞ்சைமிகப்

பயன்படுத்த வந்தமனம் பருகும் பாட்டு

யாவருக்கும்ஒத்துவரும்!

யானிசைக்கும் தீங்கவிதை வாழும் என்றும்!

★

# கனி இதழ்களில் காய் உதடுகள்!

வண்ணப் பூக்கள் பறித்து நந்தவனங்களில்—உலவி
மணக்கும் மெய்யர் மணக்கும் மூச்சர் இருளிலே—என்றன்
எண்ணம் நடுங்கி இனிக்க என்னைத் தொடுவரே—சொர்க்கம்
ஏற்றி என்றன் இதழில் உதடு நடுவரே!

மலர்ந்த பூக்கள் பார்த்து மலர்ந்த முகத்தினர்—மலரின்
மாலைத் தொடையல் எடுக்கும் வாகு தெரிந்தவர்-மெத்தை
மலர்ந்து கிடக்கும் இந்த மாலை எடுப்பரே—முடிவில்
மயங்கிச் சோர்ந்து நழுவ மடியைக் கொடுப்பரே!

வான வில்லின் சிதறல் வண்ணப் பூக்களை—குடலை
வைத்துச் சுவாமி ஊர்வலத்தில் தூவுவார்—மஞ்சம்
நானும் தானுங் களிக்கும் ஊர்வலத்திலே—நானே
நாணக்கோடி உணர்வு வண்ணந் தூவுவார்!

மாலை கொடுத்துக் கடவுள் அன்பில் நெகிழ்பவர்—குலவும்
வயதினர்க்கும் மாலை தந்து நெகிழ்த்துவர்—தம்மின்
காலில் வணங்கும் என்றன் அன்பில் நெகிழ்பவர்—தேவ
கன்னியென்று களிமயங்கி நெகிழ்த்துவர்!

சாத்துப்படிகள் சப்பறங்கள் பூச்சரம்—அந்தித்
தாங்கிச் சென்றார்! எங்கோ இரவுத் திருவிழா—அரைக்
காத்திருந்தென் நெஞ்சங் கண்ணில் வழிகிதே—மெத்தைக்
கையுங் காலும் உடம்பும் உளைந்து நெளிகிதே!

# கடை மூடிக் "கடை" திறக்க..!

தீவுக் கூட்டச் சித்திரங்கள் நடுவிலே—இந்தப்
பாவி நெஞ்சம் சஞ்ச லங்கள் மடியிலே!

155720

வாரம் ஐந்தில் வருவேன் என்றார்
மனங்க லங்கி ஏகி நின்றார்
தூர தேசஞ் சென்ற அத்தான் மீளவில்லையே—அங்கு
சொந்த மாகக் கடைக ளுள்ளார் மீளவில்லையே!

இரங்குங் கடலின் துன்ப ஓதை
எங்கும் மணலில் நிலவின் போதை
வருந்து நெஞ்சைக் கொல்லு முன்னம் வந்து காப்பரோ—என்றன்
மனதை வாட்டும் வறுமை கோடிவந்து தீர்ப்பரோ?

கூடல் பனையில் காக்கைக் கதறல்
குளிர்ந்த காற்றில் மேனிப் பதறல்
வாடும் என்னைக் கொல்ல முன்னம் பறந்து வருவரோ—பேச
மறந்து சாய்ந்து கண்ணீர் பெருக்க மார்பைத் தருவரோ?

சந்திர பிம்ப நீர்த்தேக் கங்கள்
தவளைக் குரலில் மிஞ்சேக் கங்கள்
கொந்தி என்னைக் கொல்லு முன்னம் தேடி அணைவரோ—கனிகள்
குலுங்கும் மாலை என்று தோளில் சூடி அளைவரோ?

சொந்த ஊரில் தினமிருந்து
தொழில்கள் செய்து வாழும் வாழ்க்கை
தந்து மண்ணில் அனைவருக்கும் சொர்க்கம் ஆக்கடா—இறைவா
தலைபிரிந்து மேனி துடிக்கும் கொடுமை நீக்கடா!

# கட்டி என்னை அணைக்கும் போதும்!

ஆறுத்தக் கரையின் வெள்ளை வேட்டிக்
கமகமக்கும் நீல மேனிக் காரரே—மேனிக்
கருமை மின்னுந் தங்கச் சங்கிலிக் காரரே—ரசிகர்
கறுப்பு வெள்ளைத் தலைகள் கோடி
களிப்பி லாடத் தவில்மு ழங்கும் வீரரே—இரவில்
கருணை இன்றி எனைப்பி ரிந்தீர் தூரமே!

ஒப்பில் ரசிகன், மேதை யாகி
ஒயா தூர்கள் பட்டங்கள் சூட்டும் விண்ணனே—அகில
உலகும் மயங்குந் தவிலில் மன்னர் மன்னனே!—இரவில்
இப்பொழு தெந்தக் கோயில் மேடையில்
இன்ப மாரி பொழிந்து கொண்டி ருப்பீரோ!—ஏங்க
என்னை யிங்கு மறந்து விட்டி ருப்பீரோ!

ஆதி, ரூபகம், மிஸ்ர சாப்பு,
அள்ளுஞ் சந்தக் கண்ட சாப்புத்தாளங்கள்—விரல்கள்
அசைவில் தாங்கள் சிந்துந் தங்கப் பாளங்கள்!—குழலின்
நாதப் புனலின் வரம்பு தந்து
நறுமை ஜீவன் ஒளியுந் தந்து துய்ப்பீரே—தவிலின்
நாதச் சரளம் கனிகள் தாங்க வைப்பீரே!

சாமி நிற்க வடக்கு வீதியில்
தவில் சமாவிற் தலைக்க டாவாய் நிற்பீரே—கைகள்
தட்டும் ரசிகர் வெள்ளம் நடுவில் நிற்பீரே—நிற்குஞ்
சாமி முன்னே சதுஸ்ர நடையில்
தனித்தொ டங்கித் தவில்கு முவையே ஊக்குவீர்—இன்பச்
சங்கீர் ணநடை வரைக்கும் முழங்கி ஆர்க்குவீர்!

'கலையில் சின்ன இந்தியா என்று
    கலைஞர் வணங்கும் இணுவில் என்றன்ஊ ரடி'—என்றே
    கட்டி என்னை அணைக்கும் போதுங் கூறுவீர்—தூக்க
நிலையில் கூடத் 'தில்லாணு தம்மை
    நீக்கி இன்று சினிமாப் பாட்டே விரும்புமுர்—ரசிகர்
    நிலை யிழிந்தார்' என்று சொல்லி வருந்துவீர்!

எண்ணஞ் செயல்கள் மட்டு மன்றி
    இதயம் உயிருங் கலைக்குத் தந்த கலைஞரே—என்றன்
    எல்லாங் கொள்ளை கொண்டி ளிக்கும் தலைவரே—''மயக்குங்
கண்ணி! நெஞ்சை உனக்குத் தந்தால்
    கலைம றந்துனைச் சுற்ற நேரும்'' என்றீரே—கோடி
    காதைக் கலையைக் காத்தெ னைத்தான் கொன்றீரே!

★

# இருட்டில் இறங்கி ஓடுகிறேன்!

கூலட்டு வெளியில் கல்கி ளப்பும் வேலே
காலே சென்ருல் மாலே மட்டும் வேலே
நிலத்தை வெட்டிச் சம்மட் டியினுல் தாக்கி
நின்று நின்று கல்லு டைப்பார் பாவம்!

வெயிலில் நின்று வெந்து வெந்து ழைத்து
வீடு திரும்பும் வழியில் கள்கு டித்து
மயங்கி வெறியில் அங்கும் இங்கும் ஆடி
மாலே ஆறு மணிக்கே வந்து சேர்வர்!

இன்றி ருட்டி எட்டு மணிக்கும் மேலே!
இன்னும் அவரைக் காண வில்லே! ஐயோ!
நன்கு குடித்து மண்வெட் டியுஞ்சம் மட்டி
நார்க்க டகமும் போட்டு வீழ்ந்திட் டாரோ?

வழியில் எங்குங் கிணறு, பாம்புப் புற்று,
வண்டி பலவாய் ஓடும் றெயிலின் பாதை!
இழவு விழுந்த பிள்ளே களுமோ வீட்டில்
இருப்ப தில்லே தேடிப் பார்த்து வரவும்!

பதைப தைக்கும் நெஞ்சு பொறுக்கு தில்லே!
பார்த்துப் போக இருட்டில் துணையும் இல்லே!
எதும் ந டந்தால் அவருக் கேது செய்வேன்
இருட்டில் இறங்கிப் பதறி ஓடு கின்றேன்!

# வேண்டாம் வெள்ளை மகளே!

துரைமகள்: சந்தனத்தில் செஞ்சாந்து
தண்கரும்பில் செங்கரும்பு
தாமரையில் செங்கமலம் நான்—நாடு
வந்தனைசெய் வெள்ளைமகள் நான்—ஓடி
வந்தணைக்கப் பிந்துவதும் ஏன்?

தொழிலாளி: நாவலுக்குள் கருநாவல்
நன்மரத்தில் கருங்காலி
நானிலத்துள் கருவண்டல் நான்—ஏட்டுத்
தேவருக்குள் ராமனைப்போல் வேன்—கொஞ்சிப்
பாவந்தனைத் தேடுவேனோ காண்!

துரைமகள்: ஏவலுக்குப் பணியீரேல்
எம் தேயிலைத் தோட்டத்தில்
இனியுமக்கு வேலையே இல்லை—எங்கள்
சேவையிற்கும் இடமோ எல்லை—வேலை
தேவையெனில் ஏற்பீர் சொல்லை!

தொழிலாளி: வேலையிங்கே இல்லையெனில்
வேறிடத்தில் பெற்றிடலாம்
வேண்டுமெனில் உயிரும் துஞ்சுவேன்—தெய்வம்
போல என்றும் நெறிமை கொஞ்சுவேன்!—தமிழ்
நூலின் கோடி குணங்கள் மிஞ்சுவேன்.

# இறப்பிலும் நீயென் காதலி!

ஏற்பதில் என்றன் அன்பை
　　இசைவிலாப் பெண்ணே! ஏங்கிக்
காற்றினில் திரிந்தும் வெய்யிற்
　　கனலிடைப் புலர்ந்தும் பெய்யற்
சேற்றிடைப் புரண்டுஞ் செய்யுஞ்
　　செயல்மறந் தலைவேன்! ஆனால்
வீற்றிருப் பதனால் நெஞ்சுள்
　　வேதனை அணுகா துன்னை!

சட்டியின் சடைகள்! தும்புச்
　　சக்கையின் வதனம்! எண்ணில்
பொட்டலின் உடைகள்! ஊத்தை
　　போர்த்திய உருவம்! என்று
தொட்டிடற் கஞ்சும் வண்ணம்
　　தொலைவிலாந் திரிவேன்! பேறாய்
எட்டிடா இழிவோ உன்னை
　　இருப்பதால் இதயத் துள்ளே!

இடையறுக் கண்ணீர் வெள்ளம்!
　　இடையிடைப் பெருமூச் சுக்கள்!
மடிவிலாப் புலம்பல்! வாழ்வை
　　மதித்திடாச் செயல்கள் கொண்டு
கெடுகிறேன் தினமும்! ஆனால்
　　கேடெதும் அணுகா துன்னே!
நடுவினில் இதயந் தன்னில்
　　நலமுற நண்ணும் பேறாய்!

PUBLIC LIBRARY
JAFFNA.



அன்ருெரு நாளில் என்றன்
    ஆவியென் உடலை விட்டுச்
சென்றிடும் போதுங் கூண்டு
    செய்தந்த உயிருக்குள்ளே
இன்றுபோல் பீடம் கட்டி
    ஏற்றியுன் வடிவைக் கொண்டு
சென்றிடும் கருணை ஒன்றைச்
    செய்திடென் றிறையைக் கேட்பேன்!

★

# அன்புத் தெய்வம்! பண்புத் தெய்வம்!

குற்றங் கண்டு சிறையில் அவரைத் தள்ளினர்—ஏதுங்
 குற்ற மற்ற குழந்தைகளையும் நெருப்பில் தள்ளினர்—அவைகள்
ஒற்றை நொடியும் ஓயா தப்பா அப்பா என்றுயிர்—வற்றி
 ஓயக் கத்திக் கதறி என்றன் நெஞ்சை உருக்கிடும்!

அப்பா கையால் சோற ருந்தி மார்பில் தூங்குவார்—மக்கள்
 அப்பா முதுகில் உப்பு மூடை யாகி மகிழுவார்!—அம்மா!
அப்பா எங்கே எங்கே யென்று கதறித்துடிக்கிறார்—இந்த
 அல்லல் நெஞ்சிற் கண்டு சிறையில் துடிதுடிப்பாரே!

ஊர்ந்து செல்லும் எறும்பு கட்கும் ஒதுங்கிப் போபவர்—கள்ளால்
 உணர்ச்சி கெட்டுக் கொலைஞ ரோடு சென்று மாண்டனர்—பட்டுத்
தீர்ந்த தையோ எங்கள் வாழ்வு மூன்று வருடமும்—என்றன்
 தெய்வத் தைநான் பிரிந்து வாழ மாட்டேன் ஐயோ! ஹோ!

அன்புத் தெய்வம் பண்புத் தெய்வம இன்பத் தெய்வமே—என்றும்
 அள்ளி அணைத்துக் கடைசி இரவும் அருள் புரிந்தாரே—சிறையின்
பின்பும் என்னை நம்பி விரும்பி ஏற்றுக் கொள்வரோ—பிரிவு
 பிரிக்கு முன்னர் கலந்த நெஞ்சம் செத்து விடுகிறேன்!

ஏக்கம் நெஞ்சை வாட்டப் பசியில் பிஞ்சு மேனிகள்—தினமும்
 இரவும் பகலும் வெந்து வெந்து துடிது டிக்குமே—இதையும்
பார்க்குங் கொடுமை அணுக முன்னம் குளத்தில் விடியு முன்—பச்சைப்
 பாலர்களையும் வீசி நானும் பாய்ந்து விடுகிறேன்!

இரண்டு குழந்தை தோள்கள் மேலே! நடந்து மூத்தவன்—"இருளில்
 எங்கே அம்மா போறம்" என்று கேட்டு வருகிறான்—குளத்து
வரம்பில் நின்ற படி "அப் பாவைப் பார்க்க!" என்னுறேன்—பெற்ற
 வயிறு பற்றி எரியக் குளத்தில் தள்ளிக் குதிக்கிறேன்!

# கொழுந்து எடுக்கின்றாயடி!

வெத்திலை பாக்கு வேண்டிக் குதப்பி
கித்துள் மரத்துச் செங்கனி போலக்
கிடக்கும் வாயடி—செம்மை
தடிக்கும் வாயடி!

ஈரப் பலாவின் ஏந்திணைப் பிஞ்சின்
பாரப் பழுவில் மார்பகம் விம்மத்
துடிக்கின் றாயடி!—கொழுந்தும்
எடுக்கின் றாயடி!

கண்ணாளனைக் கவ்வக் கைதளிர் கிள்ள
கண்ணிய மின்றிக் கங்காணி ஏச
நடக்கின் றாயடி—பல்லைக்
கடிக்கின் றாயடி!

தேச்செடிக் கெருவு தீற்றிடும் நானே
பூச்செடி உன்னைப் போற்றி அணைப்பேன்
மகிழு வாயடி—தெய்வம்
புகழு வாயடி!

7007CC

# வாடை நடுக்கும் மலைகள் நடுவே!

குவிந்த பச்சைக் குழம்பு போன்ற மலைகளின் கூட்டம்—மோதிக்
குளிர்ந்த வாடை மழைகள் அவரை நடுங்கிட வாட்டும்!
கவிந்து நெஞ்சில் துயரம் என்னை அனுப்பி நின்றாரே—வீடு
கட்டும் வேலை கவனி! விரைவில் வருவென்! என்றாரே!

அஞ்ச லகத்துப் பணிக ளோடும் அடுப்படி வேலை—முன்னர்
அணைத்தங் கென்னை உலாவும் நெஞ்சு கிள்ளிடும் மாலை
நெஞ்சு லுக்குங் குளிரை என்னால் வென்றிடும் மெத்தை—இன்று
நிம்மதியை இழந்து தவிக்க வாட்டுமே மனத்தை!

வெந்நீர் ஊற்றி ஊத்தைஉருட்டிக் குளிக்க வார்ப்பேனே —சட்டை
வெளுத்துத் தேய்த்தே அணிந்து விட்டும் அழகு பார்ப்பேனே!
இன்னோர் கோப்பை இன்னோர் கோப்பையென் றுண்ணச்செய்வேனே
எப்ப டித்தான் தவிக்கின்றாரோ என்ன செய்ய நான்? [—தனிய

எனக்குத் தன்னை நூற்று வீதம் வழங்கி இனிப்பவர்—என்றும்
என்றன் நூற்று வீத அன்பில் கண்ப னிப்பவர்
தனித்தி ருந்தே அவர் வருந்த வீடு கட்டவா?—அடுத்த
தலைமு றைக்காய்ப் பிரிந்தி ருந்து கண்ணீர் சொட்டவா?

மாயக்கண்ணீர் மயக்குப்பேச்சுப் பெண்கள் மலிந்தஊர் —இரங்கு
மனத்தர் தனிய இருக்கின் றாரே அறிகில் நெருங்குவார்!
தீயைப் போன்றோர் நெருங்கில் அவரின் சாந்திகுறையுமே—ஆ! என்
சேயைத் தாயைத் தெய்வத் தை நீ காக்க இறைவனே!

## உன்வீடு இழுக்குதடி!

'ஙே' வென் றிரைந்து நள்ளிர வெல்லாம்
சொரியும் மழையோசை
'ஓ'வென் றலறிப் பாறை மேலே
உதிரும் நீரோசை
'ஆ'வென் றழுது புரளும் என்றன்
ஆன்மா வின் ஓசை
'போ'வென் றுனது வீட்டுப் பக்கம்
புரளி பண்ணுதடி!

சவுக்கம் மரங்கள் வரிசை கண்ணில்
தட்டுப் படும்போது
சிவக்கும் வெய்யில் மலையுன் வீட்டின்
திக்கில் தெரிகையிலே
இவட்கென் நினைவே இல்லைத் தானோ
எனநான் அழுகையிலே
துவக்கங் கொள்ளுந் துயர்நான் வரவே
தூண்டும் உன்வீடு!

'இதயம் முழுதும் உங்கட் கென்ன நீ
என்றோ பதறியதும்
'எதையும் நீப்பேன் உங்கட் காக!'
என நீ விம்மியதும்
'உதயம் என்றோ உறவுக் கென்ன நீ
ஒருநாள் ஏங்கியதும்
வதையே செய்துன் வீட்டிற் கோடி
வரவே உந்துதடி!

வட்டக் கரிய விழிகள் வாஞ்சை
வழியப் பார்ப்பதனை
பட்டுக் கன்னங் கனியக் கனியப்
பாங்காய்ச் சிரிப்பதனை
தொட்டுத் தழுவும் படியுன் விழிகள்
சுழலுஞ் சுழற்சியினை
எட்டத் திருந்தே எண்ணினும் உன்றன்
இல்லம் அழைக்குதடி!

## கனவுப் பூ மரமே

காதல் கோபுரமே—என்
கனவுப் பூமரமே!

வரம்பு கடந்த வாழ்வினில் மூழ்கி
நரம்பு வெறிக்குள் வீழ்ந்திரை யாகி
குரங்கு மிதித்த பூச்சர மாம்நான்
விரும்பிக் கூடத் தழுவிட எட்டாக்
(காதல்......)

ஆயிரங் கைகள் அணைத்த மகிழ்வை
நாயென வாழ்வில் நயந்தவள் பாவி
வாயிதழ் மேனித் தொழுநோய் வாங்கிய
தீயவ ளாம் நான் எண்ணவும் ஒண்ணுக்
(காதல்......)

பாதையின் ஓரம் பசிகுளிர் நடுவே
நாதியில் லாமல் கிடந்தவள் என்னை
ஆதர வன்பாய் அணைத்தெடுத் தோடி
வேதனை தீர்த்தவர் நினைவால் கனிந்த
(காதல்......)

அழிந்தவர் தொண்டினில் அழிந்திடும் அவரின்
தொழும்பினில் மூழ்கித் தூயஅன் பாடிக்
குழைந்திடும் வாழ்வைக் குலவிடுந் தூய்மை
இழந்தவள் என்னுல் எட்டிட முடியாக்
(காதல்......)

# அன்பின் அறுவடைக் கவிதைகள்!

'இன்பவானில்' எனும் இக்கவிதைத் தொகுதியில் இடம் பெறுங் கவிதைகள் அனைத்தும் அன்பு வழிபாட்டின் அறுவடைகள்! கணவன் மனைவியரின் அல்லது கணவன் மனைவியாகிட இருப்பவர்களின் காதலன்புடன் தாயன்புங் கலந்த பரவச நிலையை வர்ணிப்பவை.

உலகில் தலைசிறந்த தியாக அன்பு—ஒப்பற்ற இன்பம் தரும் அன்பு—கடவுள் தன்மை வாய்ந்த தன்னலமற்ற அன்பு தாயன்புதான்.

இத்தாயன்பு பலரைப் பொறுத்த மட்டில், அன்னையரிடம் மட்டுமன்றி உற்ற நண்பர் உறுதுணைநிற்கும் மனைவியர் முதலிய உறவினர்களிடமிருந்தும் அவர்கட்குக் கிட்டுகின்றது. ஒருவன்மீது காதல் மனைவிக்கு இத் தாயன்பு உண்டாகிவிடின் இது தனிநின்று அவன் நெஞ்சில் பேரின்பம் பெருக்குவதோடு, மனைவி என்ற பதவிக்குரிய காதலன்பையும் ஊக்கிப் பன்மடங்காக்கி அவன் இதயத்தைத் தேன்மழையில் ஆட்டுவதன் மூலம் வாழ்வில் பிடிப்பையும் உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் சொந்தமாக்கி விடுகின்றது. அவன் பரவசனாகித் தன்குடும்ப வாழ்வும் சமூகத்தின் வாழ்வும் செழிப்படையும் சாதனைகளில், நிலவைப் பொழியும் தொண்டுகளில் இறங்கி வெற்றிகாண இத்தகைய அன்பு பல விதங்களிலும் காரணமாகி நிற்கிறது. இவ்வன்பிற்கேங்கி ஏமாந்த பரிதாபத்துக்குரியவர்களில் தாழ்ந்த இயல்பினர் தமக்கும் சமூகத்துக்கும் தீங்குதரும் செயல்களில் இறங்கி அழிவை உண்டாக்குகின்றனர். நல்லவர்களோ உலகுக்கு நன்மை பயக்கும் உயர்ந்த சாதனைகளில் ஈடுபட்டு மனச்சாந்தி அடைகின்றனர்.

அன்பின் உன்னத நிலையைப் பற்றியோ சாமான்ய அன்பின் சுவைபற்றியோ கூடப்புரிந்து கொள்ளாமல்-அன்பு செலுத்துவதிலும், தன்மீது செலுத்தப்படும் அன்பை மதித்துக் கொண்டாடுவதிலும் ஈடுபாடின்றி நடந்து கொள்ளும் ஒருவன் ஈனஇரக்கமின்றி பழிபாவங்களை மூர்க்கத்தனமாகவும் மறைமுகமாகவும் புரிந்து சமுதாய அமைதிக்கும் நலனுக்கும் குந்தகம் ஏற்படுத்துகிறான்.

ஆகவே உலகை வாழ்விக்கும், மகிழ்விக்கும் மகாசக்தி யாகிய தாய்மைகலந்த அன்பை உரிய இடங்களில் செலுத்தவும் சுவைக்கவும் மனிதன் பழகவேண்டும. அதிலும் ஒருவனுக்கு வாழ்வின் பெரும்பகுதியில்—வாழ்வின் பொறுபுக்கள் மிகுந்த இல்லறக் காலப்பகுதியில் துணைநிற்க வேண்டிய அவன் மனைவியும், அவளுக்கு 'உலகமாக' வேண்டிய அந்தக் கணவனும் இத்தகைய—மகோன்னத—வெறிமயமான அன்பை ஒருவர்க்கொருவர் கொடுத்தும், அதில் மகிழ்ந்தும் வாழ்ந்து வருவதே தமக்கும் சமூகத்துக்கும் செய்யும் மகத்தான தொண்டாகும். ஆம்! குடும்பத்தில் அன்பு மட்டும் நிலவினால், மற்றும் குறைகள், வாழ்வுப் பிரச்சினைகள் எல்லாம் சகிக்கப்பட்டோ அசட்டைபண்ணப்பட்டோவிடும்-இன்பம் வாழ்வில் கொலுவீற்றிருக்கும்!

எனவேதான் ஈழத்தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படும் பல்வேறு தொழில்வழிச் சமூகங்களிடையே-அவ்வத் தொழிலுக்கே சிறப்பாக உரிய பிரச்சினைகள் முதலியன காரணமாக ஒருவருக்காக ஒருவர் இரங்கி உருகும் கணவன் மனைவி, காதலன் காதலியரின் இலட்சிய அன்புப் பரவச நிலைகளை எளிமையான நடையில் உருக்கமாக வருணிக்க முயன்றுள்ளேன். ஒன்றிய பரிசுத்த உள்ளங்கொண்ட இருவர் பிரிந்திருக்கும் இரவுகளில்தான் ஒருவர்மீது மற்றவருக்குள்ள அன்பு மும்முரமாக, முழுமையாக வெளிப்படும் என்பதாலேயே பிரிந்திருந்து ஏங்கி உருகும் உத்திமுறையை இக் கவிதைகளில் கையாண்டேன். கவிதைகள் அனைத்தும் ஏக்கக் கவிதைகளாக இருந்தால் வாசிப்போருக்குச் சலிப்புத்தட்டக் கூடும் என்பதால் வேறுவகைக் கவிதைகளும் இடையிடையே புகுத்தப்பட்டன.

இவற்றில் பல கவிதைகளை அழகுற வெளியிட்டுதவிய சிந்தாமணி, தினகரன், சுதந்திரன், வானொலி மஞ்சரி, ஈழநாடு வாரமலர்களுக்கு என் நன்றிகள்.

இந்நூலை வெளியிடும் 'அன்பு வெளியீட்' டாருக்கும், முன்னுரை வழங்கிய சிற்பி அவர்கட்கும், ஓவிய நண்பர் திரு. ஸ்டீபனுக்கும் இந்நூலை அழகுற அச்சிடப் பெரும் ஊக்கத்தோடுழைத்த புசல்லாவை நாதன் அச்சக நிர்வாகிகள், கலையார்வம்மிக்க இளந் தொழிலாளர்கள் மற்றும் யாவருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

மேலும் தென்னகச் சஞ்சிகைகள், நூல்களின் படையெடுப்பினுல்தான் இங்கு எமது நாட்டு நூல்கள் விற்பனையாகாமல் வீடுகளுள் கட்டுக்கட்டாக முடங்கிக்கிடக்கின்றன என்று அநியாயமாக, மூட்டாள் தனமாகக் கூச்சல் போடுவதுடன், இலங்கை வாசகர்களின் சுதந்திரத்தில் வன்முறை வழியில் தலையிடும் இலக்கியப் பிரமுகர்களைப் பொறுமையோடு, பெருந்தன்மையோடு மன்னித்து, இலங்கை அவசியம் பலவகை இலக்கியங்கள் மூலம் இலக்கிய வளர்ச்சி எய்த வேண்டும் என்ற இதய பூர்வமான விருப்பத்தோடு இங்கு வெளிவரும் இலக்கியங்களில் சுவைமிக்க, தரமுயர்ந்தவற்றை எல்லாம் ஆதரித்து வருகின்றனர் இலங்கை வாசகர்கள்.

சொந்த இரசனைக்காக ஈடுபாட்டுடன் வாசித்து, வாசித்தவற்றில், தனக்கு உண்மையில் இரசிப் பூட்டியவற்றை உள்ளது உள்ளபடி பேச்சிலோ எழுத்திலோ வெளியிடும் நேர்மை—எழுத்தையும் எழுத்துப்பற்றிய விமர்சகன் கூற்றையும் அலசி ஆராய்ந்து மெய்ப்பொருள் கண்டு, தரம் மிக்கவற்றை ஏற்றுக்கொள்ளும் அனுபவம்-அறிவு நிறைந்தவன் இலங்கை வாசகன். எங்கிருந்து வந்தாலும் நல்லவையாகக் காணப்படுபவற்றைத் தயங்காமால் ஆதரிப்பதில் இந்திய வாசகனைவிடப் பன்மடங்கு உயர்ந்தவன் இந்நாட்டு வாசகன். இவற்றையிட்டு நாம் பெருமைப்படவேண்டும்.

பொதுவாக வாசகர்கள் எழுத்தாளர்களிடம் எதிர்பார்ப்பது தமது இலக்கியதாகத்தைத் தணித்து நிறைவளிக்கும் சிறந்த, சுவைமிக்க இலக்கியங்களையே! அல்லாமல், வெறும் உபதேசங்களையோ சுயடமாரங்கள் வயிற்றெரிச்சற் புலம்பல்களையோ பத்திரிகை அறிக்கைகளையோ இலக்கிய உலகிற்கே இழுக்கான பலாத்கார நடவடிக்கைகள் சலசலப்புகளையோ அல்ல! இவ்வுண்மையை இன்னுங் கூட உணராமல், நல்ல நல்ல இலக்கியங்களைப் படைத்துப் படைத்து வாசகன் முன் வைக்காமல், வகைவகையான இலக்கியங்களை உருவாக்கக் கூடிய திறமை சாலிகளை இனங்கண்டு தட்டிக்கொடுத்து, அவர்கள் எழுதும், எழுதி வைத்திருக்கும் தனித்துவ இலக்கியப் படைப்புக்களை அச்சேற்றி வாசகரிடையே நடமாடவைக்க முயலாமல், ஈழத்து இலக்கியப் பூங்காவில் பல்வகை நறுமணமலர்களும் பூத்துக் குலுங்குவதற்கு குறைந்தது நாம் இடையூறுவது செய்யாதிருக்க வேண்டும் என்ற சாதாரண பொறுப்புணர்ச்சியாவது இல்லாமல் நடந்து கொள்கின்றனர் சில இலக்கியப் பிரமுகர்கள்!

இவையன்றி ஈழத்து இலக்கிய உலகில் மண்டி மலிந்து வரும் பலவகைத் தில்லுமுல்லுகள், குறுக்குவழி முயற்சிகள், குறுகிய மனப்பான்மைகள், இருட்டடிப்புக்கள், சண்டித் தனங்களால் பல படைப்பாற்றல்மிக்க—அனுபவம்கனிந்த—முழுத்தமிழ் இலக்கிய உலகமுமே நன்கறிந்த மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் பலர் மனம்விரக்தியுற்று எழுத்துத்துறையிலிருந்து வெகுதூரம் ஒதுங்கிக் கொண்டுவிட்டார்கள். இதன் விளைவு ஈழத்து இலக்கியவரலாற்றில் ஒரு தொய்ந்த வரண்ட காலப்பகுதியைப் படைத்துவிட்டது என்பதை நாம் உணர்ந்து வருந்த வேண்டும். இந்த எழுத்தாளர்கள் மனங்களில் பழையபடி ஆர்வம் பீறிடும்வகையில் இவர்களின் இலக்கியங்களுக்கு நூல்வடிவங் கொடுப்பதற்கு தமிழ் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள நிறுவனங்களும், தனிப்பட்ட அன்பர்களும் முயற்சிகளை மேற்கொள்ளல் வேண்டும். நல்லவற்றை நம்வாசகர்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள்.

விரக்திநிலை பலசந்தர்ப்பங்களில் என்னையும் ஆட்கொண்ட போதிலும் "எழுதவேண்டும்" என்ற உந்தல் என்னுள் தீவிரப்பட்டு மனம் உருப்பிடித்துக் கிளம்பும்போது என்னால் சமாளிக்க முடியவில்லை; எழுதத் தொடங்கி விடுகிறேன்.

என் முந்திய நூல்களுக்குப் பல முதிய எழுத்தாளர்கள், கல்விமான்கள், வாசகர்கள் வழங்கிய பாராட்டுக்கள்—எழுதிய பாராட்டுக் கடிதங்கள், நூல்களின் விற்பனையில் வெளியீட்டாளர்களுக்குக் கிடைத்த ஆதரவு, எனது இந்த ஆக்கங்களுக்கும் நூல்வடிவங் கொடுப்பிக்கும் துணிவை ஏற்படுத்தின.

இதோ நூற்பிரதிகள் வாசகர்களின் கைகளுக்கு வந்துவிட்டன. வாசகர்களுக்கு யான்விடுக்கக்கூடிய ஒரேஒரு கோரிக்கை 'இக்கவிதைகளை முடிந்தவரை பொறுமையோடு படித்துப்பாருங்கள்' என்பதுதான்! மேற்கொண்டு நீங்கள் மகிழ்ந்து பாராட்டுவீர்களோ சலிப்புற்று வீசுவீர்களோ என்பதெல்லாம் நிச்சயமாக இக்கவிதைகளின் தரத்திலும் சுவையிலுமே தங்கியிருக்கின்றன.

வணக்கம்.

ச. வே. பஞ்சாட்சரம்.

'வேல்மனை'
இணுவில் மேற்கு,
இணுவில்.

கோகுலத்துக்கொரு கிருஷ்ணன்!

யாழ்நகருக்கொரு கிருஷ்ணபவான்!

பரிவான வரவேற்பால்

பரிசுத்தமான தயாரிப்பு—

பரிமாறல்களால்

பசிதீர்க்கும் மதிய போசனத்தால்

பல் வகைச் சிற்றுண்டிகளால்

பரவச மூட்டி மகிழ்விக்க

உங்களை அழைக்கிறது.

# கிருஷ்ணபவான்

(சைவ ஹோட்டல்)

திருமணம் மற்றும் விருந்து வைபவங்களுக்கும்

வேண்டிய உணவுவகைகளை

ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

வாடிக்கையாளர் திருப்தி எங்கள் திருப்தி!

உரிமையாளர்:

ந. கிருஷ்ணபிள்ளை.

35, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

அருந்துங்கள்

சுவைகளின் சிகரம்!

புத்துணர்வுப் பொக்கிஷம்!
ஆரோக்கியத்தின் காவலன்!
ஊக்கம், உற்சாகக் களஞ்சியம்!

# மண்ணுலகத் தேவாமிர்தம்

# அண்ணா கோப்பி

அழகிய கப்களில் வேண்டிய அளவுகளில்
எங்கும் கிடைக்கும்.

---

வாழும்வரை . . .
பல்லொளி வீச்சோடு
சொல்லொளிப் பேச்சோடு வாழ்ந்திடப் பாவியுங்கள்

## அண்ணா பற்பொடி

---

## அண்ணா தொழிற்சாலை

இணுவில்.

வண்ண வண்ண டிசைன்களில்
கூப்பன் புடவைகள்!
கண்கவர் கைத்தறி நெசவுத்துணிகள்!
ஷேட்டிங் சூட்டிங் ரகங்கள்!
இன்னும் ஏராளமான
பலவகைப் புடவைத் தினிசுகள்
சாய்ப்புச் சாமான்கள்!

மனத்திருப்தியோடு மலிந்த விலையில்

வாங்கிக்கொள்ளச் சிறந்த இடம்

## விக்னேஸ்வரா புடவைமாளிகை

(பஸ் நிலைய வடபுறம்)

27/1, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம். போன் 7388

---



அசல் தங்க வைர நகைகள்!
அற்புதக் கலை நுணுக்கங்களில்!

நாகரீக நங்கையர்க்குகந்த
நவீன டிசைன்களில்!

நிதான விலையில் வாங்கிக் கொள்ள,
குறித்த தவணையில் ஓடருக்குச்
செய்துகொள்ள வருபவர்கள்



வாடிக்கையாளர்களாகிவிடும்

நன்மதிப்புப் பெற்ற நகைக்கடை

## விக்னேஸ்வரா ஜுவல்லர்ஸ்

(உரிமையாளர்: ஐ. சுப்பிரமணியம்.)

ஆஸ்பத்திரியடி,

கே. கே. எஸ். வீதி, இணுவில்.

பாவனையாளர்களே!

சிறுவர்க்கான

மூன்று சக்கர சைக்கிள்கள்
பொம்மைகள் முதலான
விளையாட்டுப் பொருட்கள்
பேபி பிளாங்கெற்றுகள்
றபர் ஷீற்றுகள்

பெண்களுக்கான

அழகுச் சாதனங்கள்! பலவகைப் பரிசுப் பொருட்கள்!

மற்றும் பெட்ரோ மெக்ஸ் விளக்குகள்
சூட்கேஸ், டிறங்குகள், சைக்கிள் உதிரிப்பாகங்கள்
முதலியவற்றை

நியாயமான மலிவான விலைகளில்
விற்பனை செய்துவரும் ஒரே ஸ்தாபனம்

# சிவாஸ் கோ

(பஸ் நிலையத்தென்புறம்)
196, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

வகைவகையான

ஒட்டு மாங்கன்றுகள்
தோடங்கன்றுகள்
மாதுளங் கன்றுகள்
திராட்சைக் கன்றுகள்
என்பவற்றோடு

வண்ண வண்ண ரோஜா மலர்ச் செடிகளும்
ஏராளமாக விற்பனை செய்து வரும் நிறுவனம்!
அமைச்சர்களும் வந்து பாராட்டிய செடிவனம்!

# நியூ லங்கா பாம்

NEW LANKA FARM

முகவரி: கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

உரிமையாளர்:
S.K. துரைசிங்கம் J.P.

"நேர்மையே நிறைந்த செல்வம்"

நீதிவழியில்! நியாயவிலையில்!

வீட்டுப் பாவனைப் பொருட்கள்!
விளையாட்டுச் சாமான்கள்!
மங்கையர்க்கான அழகுச்சாதனங்கள்!
மற்றும் பரிசுப்பொருட்கள்!
மணிக்கடைச் சாமான்கள்!

வாங்கிக்கொள்ள

நம்பிக்கையான ஸ்தாபனம்

# ஏ. வி. எம்'ஸ்.

புசல்லாவை.

கண்ணுக்கினிய தோற்றங்களில்
கவர்ச்சியான பாவங்களில்
அழகிய பின்னணிகளில்
அத்தனை அளவுகளிலும்

படம்பிடிக்கச் சிறந்த ஸ்ரூடியோ

# குயின்ஸ் போட்டோ ஸ்தாபனம்!

வைபவங்களில் படம்பிடிக்கும்
அழைப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

புளக்குகள், றப்பர் ஸ்டாம்புகளும் செய்விக்கலாம்.

நல்லூர்ச் சந்தை - கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: ஐ. தியாகராசா.

தேசபக்தர்களே! செந்தமிழ்ச் செல்வர்களே!

கன்னியர் மனங்கவரும் கலை நுணுக்கங்கள்
அன்னையர் ஆசைப்படும் நீடியபாவனை
கொண்ட

# கைத்தறிச் சேலைகள்!

கலைஞர்களும் தேசபக்தர்களும்
அணிந்து மகிழும்
கவர்ச்சியான

கைத்தறி வேஷ்டிகள்!
சால்வைகள்! ஷேட்துணிகள்!

அழகிய வண்ணங்களிலே
மெத்தை விரிப்புக்கள், போர்வைகள்
மேசை விரிப்புக்கள், டவல்கள்
இன்னும் பலவகைக் கைத்தறித் துணிகளுக்கும்

பெயர் பெற்ற ஸ்தாபனம்

# ஸ்ரீ சிவகாமி
# கைத்தறி நெசவுநிலையம்

இணுவில்.

கிடைக்குமிடம்

# வளர்மதி டெக்ஸ்டைல்ஸ்

176, K.K.S. வீதி — யாழ்ப்பாணம்.

# அமுதவாக்கு

பிரம்பும் தடியும் உபயோகிக்காமல், கோபமும் குறையும் இல்லாமல், சம்பளத்தையும், வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்குக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே.

உறங்காமல், சோர்வுகொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிற்கும். நீங்கள் தேடும் போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந் தீங்கு செய்தாலும் வசைமொழி கூறுமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்காமல், கற்பிப்பனவும் நூல்களே.

—றிச்சேட்— டி. பியூ.றி.


மில்க்வைற் ஸ்தாபனத்துக்கு

மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி இத்தகைய அறிவு நூல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சோப்

தொழிற் சாலை

யாழ்ப்பாணம்.

# அன்பு வெளியீடு

## நூல் நிலையங்கள் சுவைஞர்கள்
## விரும்பிய பெரும் நூல்கள்

(1) தடுப்புக் காவலில் நாம்...! ரூ. 2.00
—புதுமை லோலன்—

(2) கருகிய ரோஜா..... ச. 50
—புதுமை லோலன்—

(3) இருளினுள்ளே..... ரூ. 2.00
—எஸ். அகஸ்தியர்—

(4) தாய்.... ரூ. 2.00
—தில்லைச்சிவன்—

(5) ஒன்றே தெய்வம்..... ரூ. 2.00
—எஸ். பி. கிருஷ்ணன்—

● வியாபாரிகளுக்குக் கழிவுண்டு
● வி. பி. பி. கவனிக்கப்படும்.

விற்பனையாளர்:

# அன்பு புத்தகசாலை

27, டி. பெரியகடை
**யாழ்ப்பாணம்.**

155720



# எழிலார்ந்த
# தங்க, வைர
# நகைகள்!

எவர்சில்வர் செற்றுக்கள்
கைக்கடிகாரங்கள் — பாகங்கள்
மங்கையர் — வாலிபர்க்கான
அலங்காரச் சாதனங்கள்

வாங்கச் சிறந்த இடம்

# திருமகள் ஜுவல்லர்ஸ்

பஸ் நிலையம் புசல்லாவை.

---

## எல்லா அளவுகளிலும்

படம் பிடித்துக்கொள்ள
படம் கலர் செய்விக்க
படம் பெரிதாக்குவிக்க

சிறந்த ஸ்ரூடியோ

குறுகியகாலத்தில் புசல்லாவை மக்களின்
பேராதரவைப்பெற்ற புகழ்பெற்ற
ஸ்ரூடியோ

# குமார் ஸ்ரூடியோ

புசல்லாவை

(திருமணம் முதலிய வைபவங்களிலும் வீட்டில் வந்து படம்
பிடித்துக் கொடுக்கப்படும்)

வயிறு நிறைந்த

மனம் நிறைந்த

மதிய போசனம்



வகை வகையான சிற்றுண்டிகள்
மற்றும் பலகாரங்கள்
அருந்தவும்
வாங்கிச் செல்லவும்
ஓடரில் பெற்றுக் கொள்ளவும்

நம்பிக்கையான ஹோட்டல்

# கருணானந்த

## பவான்

புசல்லாவை.





நட்சத்திரம் போல் வைரங்கள்
கண்ணைப் பறிக்கும்
வேலைப்பாடுகள்

இவற்றோடுகூடிய
மின்னொளிவீசும்

## தங்க வைர நகைகள்

தயாரிப்பதில்

இணையற்ற ஸ்தாபனம்

# ஏ. கே. எஸ்.

## நகைமாளிகை

337, நுவரெலியா வீதி,
புசல்லாவை

## ச. வே. பஞ்சாட்சரம்

கலைஞர்கள், சைவப் பெரியோர்கள், தமிழ் அபிமானிகள் நிறைந்த இணுவில் கிராமம் யாழ்ப்பாணத்தில் பிரசித்த மானது! தமிழுலகு நனிசிறக்க இவ்வூர் தந்த இன்தமிழ்க் கவிஞர் ச. வே. பஞ்சாட் சரம்.



இளமை முதலே இலக்கிய வெறி கொண்டார்; கவிதைகள் யாப்பதில் இன்பங் கண்டார். இவரது கவிதைகள் ஈழத்துப் பத்திரிகைகளை அணிசெய்தன.

இவரது சொல்லாட்சித் திறனை, கற் பனை வளத்தை நயந்தவர் பலர்; உணர்ச் சிப் பிரவாகத்தில் மிதந்தவர் பலர்; புது மைக் கருத்துக்களை வியந்தவர் பலர்! ஆமாம்; ஈழத்து இலக்கிய உலகில் தனக் கென ஒரு தனியிடத்தை இவர் பெற்றுள்ளார்.

எழிலி, தண்டலை, என்ற இவரது கவிதை நூல்கள் பவனி வந் தன. எழிலி என்ற நூலுக்குச் சாகித்திய மண்டலம் 1000 ரூபா பரிசளித்துப் புகழின் உச்சியில் இவரை வைத்தது. சின்னஞ்சிறு கதைகள் இவரது புதிய முயற்சி! கதை சொல் லும் பாணி, தேக்கப்பட்டுள்ள ஆன்ற தத்துவங்கள், இடை யிடையே பளிச்சிடும் 'மண் வாசனை' என்னைப் பெரிதும் ஈர்த்த அம்சங்கள்.

'கவியரங்கிற்கோர் பஞ்சாட்சரம்' என்று இரசிகர்கள் வியக்குமளவிற்கு அரும்பணி புரிகின்றார்.

பொருளைப் பூமியை மதிப்பதைவிட, எழுத்தாளர்களை, அவர்களின் ஆக்கங்களைப் பெரிதாகப் போற்றும் இவர், அவர் தம் நூல்கள்பற்றி விமர்சிப்பதைப் பெரும் பேரின்பமாகக் கருதுபவர். அவர்களுடன் அளவளாவி இலக்கிய சர்ச்சைகளில் ஈடுபடுவதில் இவருக்கு அலாதிப் பிரியம்! இவ்வாய்ப்புகள் கிடைக்கும் தினங்களில் பூரிப்பு அடைகிறார்; வாழ்க்கையின் சிக்கல்களை மறந்து புளகாங்கிதம் அடைகிறார்.

இத்தகைய கவிஞர் ச. வே. பஞ்சாட்சரம் சிறந்த இலக்கிய கர்த்தா, இலக்கிய இரசிகர், விமர்சகர் ஆவர். நல்ல தமிழ் ஆசிரியர், பண்டிதராகவும் விளங்கும் இவர் புதுமை வேட்கை மிக்க உயர்ந்த கவிஞர் ஆவர்.

A. T. பொன்னுத்துரை, B. A.

குரும்பசிட்டி,
16-11-71.

அட்டை, திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது

894.